Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 06 செவ்வாய்க்கிழமை (22-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:200

## பயணச்சீட்டு விநியோக விவகாரம்; செய்தியை மறுக்கின்றது ஈ.பி.டி.பி.!

யாழ்ப்பாணம்,ஓக.22

"சிற்றி ஒவ் றிங்கோ" கப்பலுக்கு பயணச்சீட்டு வழங்கும் தனியார் முகவரிடம் இருந்து அப்பொறுப்பு அகற்றப்படவுள்ளது என்ற சாரப்பட வெளியான செய்தி குறித்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) நேற்றிரவு அறிக்கை ஒன்று வெளியிட்டது.

இது தொடர்பாக நேற்று உதயனில் வெளியான செய்தியை சாடுவதாக அந்த அறிக்கை அமைந்திருந்த போதிலும் "உதயன்" பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாமல் அதற்குப் பதிலாக "தீயசக்திகள்", "விஷமிகள்" என்ற பெயர்ப்பதங்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி உறுப்பினர்கள் அறுவருக்கு கப்பல் பயண அனுமதி மறுப்பு

திருகோணமலை,ஓக.22

திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்கு நேற்று மாலை புறப்பட்ட 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்வதற்கு வந்த ஈ.பி.ஆர். எல்.எவ். அமைப்பின் ஆறு உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணியைச் சேர்ந்த இந்த உறுப்பினர்கள் இக்கப்பலில் பயணம் செய்யப் பயணச்சீட்டுப் பெற்றிருந்தனர்.

இவர்கள் கப்பலில் ஏற முயன்ற சமயம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகள் அவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### பத்துப்பேர் விடுதலை

யாழ்ப்பாணம்,ஓக.22

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் படையினரால் கைதுசெய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களில் 10 சந்தேக நபர்கள் நேற்று யாழ். நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்.

இச்சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு போதிய ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் சட்டமா அதிபரின் பரிந்துரை

(12ஆம் பக்கம் பார்க்க)

### புலிகள் தரப்பில் நால்வர் மரணம்

வவுனியா,ஓக.22

வெவ்வேறு சம்பவங்களில் தமது தரப்பில் உயிரிழந்த நால்வரது பெயர் விவரங்களை விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் கச்சாய்ப் பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் பகலவன் (இராசலிங்கம் ஜென்ஸ்மன் - கிளிநொச்சி), அதே தினம் மட்டுவில் பகுதியில் தவறுதலாக இடம்பெற்ற வெடி விபத்தில் ஒளிஅருவி அல்லது சங்கீதா (பழனி சந்திரகலா - யாழ்ப்பாணம்), கடந்த 19ஆம் திகதி திருகோணமலை, அலிஒளுவ பகுதியில் படையினருடன் ஏற்பட்ட மோதலில் உதயன் (தியாகராசா சந்திரகுமார்- கண்டி) மற்றும் நாட்டுப்பற்றாளரான கணேசன் (திருகோணமலை) ஆகியோர் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டது. (உ-8)

### கைது

சங்கானை ப.நோ.கூ.சங்கத்தில் பணிபுரியும் தொல்புரம் மேற்கைச் சேர்ந்த பரமசிவம் கரிகாலன் என்பவர் நேற்று முன்தினம் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது கைது தொடர்பாக அவரது மனைவி வலி.மேற்குப் பிரதேச சபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. வட்டுக்கோட்டை அமைப்பாளருமான என்.திரிலோகநாதனிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இதைத் தொடர்ந்து 513 ஆவது படையணிக் கட்டளை அதிகாரி கேணல் லால் பெரேராவுடன் தொடர்பு கொண்டு தாம் பேசியதாகவும்-

விசாரணைகள் முடிவடைந்ததும் அவரை விடுவிப்பதாக உறுதி கூறப்பட்டுள்ளது என்றும் திரிலோகநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

## பொதுத் தேர்தல் களம்

# யாழ். மாவட்டத்தில் ஏழு முனைப் போட்டி!

## மேலும் சில அணிகள் களத்தில் குதிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஓகஸ்ட் 22

**எதிர்வரும் ஒக்ரோபர் 10ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் ஏழுக்குக் குறையாத அணிகள் போட்டியிடுவது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது. அதற்கு மேலும் ஓரிரு அணிகள் களத்தில் குதிக்க வாய்ப்பு இருப்பதாகவும் தெரிகின்றது.**

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், புளொட்,ரெலோ சார்பான சுயேச்சை அணி, ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் சுரேஷ் அணி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி என ஏழு அணிகள் யாழ்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையிலிருந்து 146 பேரே கப்பலில் யாழ். புறப்பட்டனர்

திருகோணமலை,ஓக.22

திருகோணமலையில் இருந்து வடக்கே வருவதற்குப் போதிய பயணிகள் இல்லாத நிலையில் - ஆக 146 பயணிகளுடன் - 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் நேற்று மாலை பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டதாக திருமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வி. வேலும்மயிலும் தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் நானூறு பயணிகள் செல்ல வசதி இருந்த போதும் போதிய பயணிகள் நேற்று சமயம் வருவதில்லை என்றும் அவர் மேலும் சொன்னார்.

நாளை மறுதினம் இடம்பெறவுள்ள அடுத்த சேவையில் பய

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலின்போது அரசு வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடும் எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது அரசு கட்டவிழ்த்துவிடவுள்ள வன்முறைகள் குறித்து சர்வதேச சமூகத்துக்கு எடுத்து விளக்கவிருக்கிறோம் என்று மக்கள் ஐக்கிய முன்னணி (ஜே. வி.பி) பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

தேர்தல் பிரசாரச் சுவரொட்டியை ஒட்டிய எமது அமைப்பின் தோழர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அரசிடம் முறைப்பாடு செய்து பயன் இல்லை. அரசு புரியும் வன்முறைகள் கட்டுக்கடங்காத நிலைக்குச் செல்லும் என்பது இப்போதே தெரிகின்றது.

அரசு புரியும் வன்முறைகளை சர்வதேச உலகுக்குத் தெரியப்படுத்துவோம். அதைத்தடுக்க உதவுமாறு சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுக்கவிருக்கின்றோம். என்றார் அவர். (உ-3)

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலுக்கு அரச அதிபர் ரிக்கெற் வழங்குவது குறித்து முடிவு எடுக்கப்படவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.22

'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலுக்கு யாழ். அரசாங்க அதிபர் ரிக்கட் வழங்குவது குறித்து யாழ். மாவட்ட இணைப்புக்குழுக் கூட்டத்தில் எந்த வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

உதயன் 16-08-2000 ஆம் திகதிய இதழில் - "சிற்றி ஒவ் றிங்கோ' அரசுக்குச் சொந்தமான கப்பல் அல்ல" என்ற தலைப்பில் வெளியான செய்தி குறித்து யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அனுப்பி வைத்துள்ள விளக்கக் கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தேர்தலை உறுதிப்படுத்த கோருகின்றது தமிழர் கூட்டணி

கொழும்பு,ஓக.22

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நீதியான முறையில் நடத்தப்பட வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று தேர்தல் ஆணையாளரைச் சந்தித்த கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன், சிரேஷ்ட உபதலைவர் வீ.ஆனந்தசங்கரி ஆகியோர் இந்தக் கோரிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் உடன்பாடு தொடர்பான ஜனாதிபதி ~ அஷ்ரப் பேச்சில் முடிவு இல்லை!

கொழும்பு,ஓக.22

தேர்தல் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்காக ஜனாதிபதியும், அமைச்சருமான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச். எம். அஷ்ரப்புக்கும் இடையில் நேற்று முழு நாளும் இடம்பெற்ற பேச்சுக்களில் முடிவு எதுவும் எட்டப்படவில்லை.

எதிர்வரும் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து போட்டியிடுவதா அல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தடை நீக்கப்படாவிட்டால் ஈ.பி.ஆர்.எல்.எவ். அணி சுயேச்சையாகப் போட்டி

கொழும்பு, ஓக.22

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு மீது நீதிமன்றம் விதித்துள்ள தடை நீக்கப்படாவிட்டால் அந்த அமைப்பு சுயேச்சைக் குழுவில் போட்டியிடும் என்று அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

லண்டனில் தங்கியுள்ள அவர் கொழும்பு செய்தி ஏஜென்ஸி ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இதைத் தெரிவித்தார்.

"எமது அமைப்பின் மீது நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. இந்தத் தடை நீக்கப்பட்டால் அமைப்பின்

(12ஆம் பக்கம் பார்க்க)

### ஹண்டி கப்பலில் உ.கிழங்கு

தனியார் வர்த்தகர்களின் உருளைக்கிழங்கு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக் கொண்டு 'ஹண்டி' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. உடனடியாகப் பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பமானது. முதலில் உருளைக் கிழங்கு இறக்கப்பட்டது. (உ-173)

## கொழும்புத்துறையில் விமானக் குண்டு வீச்சு

கொழும்பு, ஓக.22

கொழும்புத்துறைப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகள் பலவற்றை விமானப்படையினர் நேற்று முன்தினம் தாக்கி அழித்துவிட்டனர் என விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

விமானப் படையினருக்கென அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட நவீனரக யுத்த விமானங்கள் இந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் -

நேற்று முன்தினம் காலை ஆரம்பித்த இத்தாக்குதல் மாலைவரை

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

அளவெட்டி, நாகேஸ்வரம்

## ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

## தேர்த் திருவிழா நிகழ்ச்சிகள்

★ நாளை (23-08-2000) புதன்கிழமை
முற்பகல் 8.00 மணி - சங்காபிஷேகம்
முற்பகல் 9.30 மணி - வசந்தமண்டபப் பூசை
முற்பகல் 10.30 மணி - சுவாமி தேருக்கு எழுந்தருளல்
பிற்பகல் 5.00 மணி - உறியடி உற்சவம்

- பொ. ப. சபை.


அன்பளிப்பு:-

சீமாட்டி புடைவைக் கடல்

யாழ்ப்பாணம். (C/12577)


## அவசர கலந்துரையாடல்

மத்திய அரச் சேவையில் எழுதுநர் சேவை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்கள் அனைவரும் நாளை (23-08-2000) புதன்கிழமை மு.ப. 10 மணிக்குப் பதிவுகளை மேற்கொள்வதற்காக D.M.I. கல்வி நிலையத்தில் *(ஆரியகுளம் சந்திக்கருகில்)* தவறாது சமுகந் தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

நேர்முகப் பரீட்சார்த்திகள் சார்பில்
- கே.பிரதீபன் -

(77538)


## HITECH

College of Computer Studies

புதிய பிரிவுகள் ஆரம்பம்



*பயிற்சி நெறிகள்*

**Diploma Courses**

| | |
|---|---|
| Diploma in MS Office | (04 Months) |
| Diploma in Software Engineering | (10 Months) |
| Diploma in Hardware Engineering | 08 Months) |

**Certificate Courses**

| | |
|---|---|
| MS Word 2000 | Visual Basic 6.0 |
| MS Excel 2000 | Visual C++ 6.0 |
| MS Access 2000 | Visual Foxpro 6.0 |
| C/C++ | Computer Networks |
| Turbo Pascal | ORACLE 7 |
| DBase IV | Power Builder 5 |

**இப் பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ளும் மாணவர்களுக்கு,**

- இலவச Windows, Multi Media பிரத்தியேக பயிற்சி வகுப்புக்கள்.
- இலவச Storage Media.
- Diploma in Hardware Engineering பயிலும் மாணவர்களுக்கு Software அறிமுக வகுப்புக்கள்.
- தொழில் புரிவோருக்கான மாலை நேர விசேட வகுப்புக்கள்.

குறிப்பு:
எம் நிறுவனத்தால் நடத்தப்பெற்ற 2000/2001 ஆம் ஆண்டிற்கான Royal fellowship Examination இல் தெரிவு செய்யப்பட்டு பிரிவு IIக்கான பதிவுகளை மேற்கொள்ளாத மாணவர்கள் 31.08.2k முன்னதாக உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

- DIRECTOR

Inuvil Hospital,
K.K.S Road,
Inuvil.

Kulappitty Jn.,
K.K.S Road,
Kokkuvil.

(77540)



## 'செந்தூரன்'

சர்வதேச தொலைத் தொடர்பு நிலையம்

மீண்டும்....!

பொலிகண்டி, பதுவளையில் *ஆரம்பிக்கப்பட்டுள்ளது!*

தொலைபேசி இல. 070 - 213034

உரிமையாளர் - சி. சிறீதரன்

(C/12583)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ல. வைத்தியகுமார்
அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி லீலாவதி நடராசா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(C/12580)

## ஆசிரியர் சங்கம் செயலரைச் சந்திக்கும்

யாழ்ப்பாணம் வந்துள்ள வட-கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.சிவானந்தன் ஆகியோரை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தூதுக் குழு ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்குச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

யாழ். கல்விவலய அலுவலகத்தில் இடம்பெறும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் கிளைத்தலைவர் மற்றும் செயலாளர்களை சங்கத்தின் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

## அளவு கருவிகளுக்கு முத்திரையிடும் நடவடிக்கை

வலி.மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வர்த்தக நிறுவனங்களின் நிறுத்தல், அளத்தல் உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி இன்றும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும், 26ஆம் திகதி சனிக்கிழமையும் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை வலி. மேற்கு பிரதேச சபை உப அலுவலகத்தில் இடம்பெறும்.


## ஸ்ரீசெல்வா சினிமா

சுரேஸ்கோபி
ஐஸ்வர்யாராய்
நடித்த
★ காவலன்

காட்சிகள்:- 10.30, 2.00
(ப.நே.)
C.D. பிரதி
*புதிய வெளியீடு*

(C/12588)



## ராஜா

(யாழ்ப்பாணம்)
இன்று
படையப்பா புகழ்
சௌந்தர்யா,
ரம்யாகிருஷ்ணன், சுரேஷ்
மற்றும் பலரின் நடிப்பில்

அம்மன்

காட்சிகள்: 10.30, 2.00
(புதிய நேரம்)
25.08.2000 முதல்

பூவேலி

(C/12325)



## நாகம்ஸ்

சுன்னாகம்.

அஜித் - ஷாலினி
நடிப்பில்

அமர்க்களம்

(ரீலீஸ்)
காட்சிகள்:
10.00, 2.30 (புதிய நேரம்)

(77481)


## கண்ணீர்ப் பூக்கள்

கடந்த 22.05.2000 அன்று அகாலமரணமடைந்த எமது உறுப்பினரின்

### மூன்றாம் மாத நினைவலைகள்



### சண்முகம் பரமேஸ்வரன் அவர்கள்

*பரமேஸ்வரா!*
*இறைவன் படைப்பில் மிளிர்ந்தாய் மண்ணுலகில்*
*கறையின்றி வாழ்ந்தாய் எம்மிதயம் எனும் வீட்டினில்*
*நிறைவோடு செய்தாய் பணிகள் பலப்பல நாட்டினில்*
*பொறையின்றிக் கவர்ந்தான் காலன் கலங்குகின்றோம்.*

*நண்பர்களும்*
*மட்டுவில் இந்து இளைஞர் மன்றமும்*

(C/12585)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஐயாத்துரை மகேஸ்வரி

அளவெட்டி வடக்கு சீனட்டிப்பாயைச் சேர்ந்த திருமதி ஐயாத்துரை மகேஸ்வரி 19-08-2000 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற துரைச்சாமி ஐயாத்துரையின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்பு மனைவியும் ஸ்கந்ததேவியின் அன்புத்தாயாரும், சுப்பிரமணியம்(இளைப்பாறிய அதிபர், வீமன்காமம் மகாவித்தியாலயம்) அவர்களின் அன்பு மாமியாரும், சுகந்தி (லண்டன்), நிகேதன் (லண்டன்), ஆனந்தி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், இந்துசேகர் (லண்டன்), இளங்குமரன் (ஜேர்மனி), கௌந்தினி (லண்டன்) ஆகியோரின் அம்மம்மாவும் மதுரா, பிரிந்தா, கிருஸ்ணா, மெதுஷான் ஆகியோரின் அன்பு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20-08-2000 அன்று கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கொழும்பு முகவரி:
*31, பொஸ்வல் பிளேஸ்,*
*வெள்ளவத்தை.*
T.P. No. 01-587712

தகவல்
சி.தவராசா
*சீனட்டிப்பாய்,*
*அளவெட்டி.*

(77543)

### முத்தையா சண்முகநாதன்

ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட முத்தையா சண்முகநாதன் அவர்கள் 21-08-2000 அன்று டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் சர்வலோஜினி (பிரான்ஸ்), சாந்தலோஜினி (டென்மார்க்), சாந்தகோபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற மு.கனகரத்தினம், மு.புனிதநாதன் மற்றும் பூலோகநாதன் தவநாயகியின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (22-08-2000) செவ்வாய்க்கிழமை டென்மார்க்கில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வைமன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மு.பூலோகநாதன்

(77542)

### சூசை லாசரஸ்

(அங்கிலிக்கன் போதகர்)

அவிசாவளை, கொழும்பைப் பிறப்பிடமாகவும், 30,கண்டிவீதி, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட சூசை லாசரஸ் நேற்று (21.08.2000) திங்கட்கிழமை கர்த்தருள் நித்திரையடைந்தார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக்கணவரும், எஞ்சலின் மேகலா (ஆசிரியை-சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) பிரேமநாத் (தொழில் நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை) பிரேம்காந்த் (பரியோவான் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (22-08-2000) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
திருமதி சரஸ்வதி லாசரஸ்
(மனைவி)

*30,கண்டி வீதி,*
*சுண்டிக்குளி.*

(77532)


## தேசிய சேமிப்பு வங்கி விசேட வட்டி அதிகரிப்பு

**நிலையான வைப்புக்களுக்கான எமது வட்டி வீதங்கள் 21.08.2000 இலிருந்து பின்வருமாறு அதிகரிக்கப்பட்டுள்ளன என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.**

| | | |
|---|---|---|
| 3 மாத வைப்பு | ரூ. 10 லட்சத்துக்கு மேல் | 12.5% |
| 12 மாத வைப்பு (வருட வட்டி) | ரூ. 500, 000/= க்கு மேல் | 12.25% |
| 12 மாத வைப்பு (மாத வட்டி) | ரூ. 500, 000/= க்கு மேல் | 11.6% |

NSB

தேசிய சேமிப்பு வங்கி
உங்கள் குடும்ப வங்கி

(C/12581)

# கடலின் அடியில் சிக்கியுள்ள ரஷ்ய நீர்மூழ்கியின் கதவை சுழியோடிகள் திறந்தனர்!

மொஸ்கோ,ஒகஸ்ட்22

**கடலின் அடியில் சிக்கியுள்ள ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பலின் வெளிப்புறக் கதவை நோர்வே நாட்டுச் சுழியோடிகள் உடைத்துத் திறந்தனர். அங்கு பணியாளர்கள் யாரும் தென்படவில்லை என்றும், கப்பலின் உட்புறத்தில் எவரும் உயிருடன் இருப்பதாகத் தெரியவில்லை என்றும் அந்தச் சுழியோடிகள் தெரிவித்தனர்.**

நோர்வேக் கரைக்கு அப்பால் 'பாஸ்ரன்' கடலின் அடியில் சிக்கியுள்ள ரஷ்ய நீர் மூழ்கிக் கப்பலான 'த குர்ஸ்ட்'டில் இருந்த பணியாளர்களை மீட்கும் பணியில் ரஷ்யர்களுடன் இணைந்து செயல்பட்ட நோர்வே சுழியோடிகள் நீர்மூழ்கிக் கப்பலின் வெளிப்புறக் கதவின் தாழ்ப்பாளை உடைத்துத் திறந்தனர்.

இந்தத் தாழ்ப்பாள் திறக்க முடியாத அளவு சிதைந்து போயிருந்தது குறிப்பிடத்தக்கது.

நீர்மூழ்கிப் பணியாளர்கள் யாராவது உயிருடன் இருந்திருந்தால் கப்பலை விட்டு வெளியேறுவதற்காகக் கதவை அடுத்துள்ள பகுதியில் காத்திருந்திருப்பார்கள் என்றும்-

ஆனால் அதுபோல் எவரும் அங்கிருக்கவில்லை என்றும் சர்வதேச கூட்டு மீட்புப் பணி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வெளிப்புறக் கதவை அடுத்து நீர்மூழ்கியின் உட்புறத்திற்குள் செல்வதற்கான வழிமுறைகள் குறித்து தற்போது மீட்புக் குழுவினர் ஆராய்ந்து வருகின்றனர். (ஒ)

## புதிய 'ஜார்கண்ட்' மாநிலத்தில்

# முதலமைச்சர் பதவிக்கு மோதல்; திணறுகிறது பாரதிய ஜனதா!

பாட்னா,ஒக.22

இந்தியாவில் புதிய மாநிலத்தின் முதலமைச்சர் பதவிக்கு மோதல் தொடங்கியுள்ளது.

பிஹார் மாநிலத்தின் சில பகுதிகளைப் பிரித்து 'ஜார்கண்ட்' என்ற புதிய மாநிலம் சமீபத்தில் உருவாக்கப்பட்டது.

இந்த மாநிலத்தில் 'ஜார்கண்ட் முக்தி மோட்சா' கட்சியின் தலைவர் சிபிசோரன் முதலமைச்சராக ஆக்கப்பட பாரதிய ஜனதாக் கட்சி ஆதரவளிக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் பாரதிய ஜனதா தலைமையிலான கூட்டணியில் இருந்து ஜார்கண்ட் முக்தி மோட்சா வெளியேற நேரிடும் என்றும் அக்கட்சி எச்சரித்துள்ளது.

பிஹாரில் சிறிது காலம் பதவியில் இருந்த நிதிஷ்குமார் தலைமையிலான பாரதிய ஜனதா ஆட்சிக்கு தமது கட்சி ஆதரவு அளித்தபோது தந்த உறுதி மொழிப்படி, ஜார்கண்ட் மாநில முதல்வராக சிபிசோரன் தெரிவு செய்யப்பட பாரதிய ஜனதா ஆதரவளிக்க வேண்டும் என்று அக்கட்சியினர் கோரியுள்ளனர்.

புதிய மாநிலத்தின் 82 உறுப்பினர் சட்டசபையில் பாரதிய ஜனதாக் கூட்டணிக்கு 40 உறுப்பினர்கள் உள்ளனர். அதேசமயம் எதிர்த்தரப்பான ராஷ்ட்ரிய ஜனதாதள் மற்றும் காங்கிரஸ் கூட்டணியில் ஜார்கண்ட் முக்தி மோட்சா இணையுமானால் அந்தக் கூட்டணி சட்ட சபையில் பெரும்பான்மை பலம் பெறும் சாத்தியம் உள்ளது.

இந்நிலையில், முதல்வர் பதவியை விட்டுக் கொடுக்கவும் மனமில்லாமல், மறுத்தால் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியைப் பிடிக்கும் என்ற பயத்துடன் இருதலைக் கொள்ளி எறும்பாக பாரதிய ஜனதாக்கட்சி தவிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். (ஒ)



எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் ஆரம்பமாகும் மிலேனியத்தின் முதல் ஒலிம்பிக் போட்டிகளில் வழங்கப்பட உள்ள தங்கப்பதக்கங்களில் ஒன்றைப் படத்தில் காணலாம். 210 கிராம் எடையுள்ள இந்தப் பதக்கம், தூய வெள்ளியால் செய்யப்பட்டு, அதன் மேல் 8 கிராம் தூய தங்கத்தால் முலாம் பூசப்பட்டுள்ளது.

# இந்த ஆண்டு 865 தீவிரவாதிகள் பலி இந்திய இராணுவ நடவடிக்கைகளில்

## பாதுகாப்புத்துறை தகவல்

புதுடில்லி,ஒக.22

காஷ்மீரில் இந்த ஆண்டில் இதுவரை 865 தீவிரவாதிகள் இந்திய ராணுவம் நடத்திய தாக்குதல்களில் கொல்லப்பட்டதாகவும் -

பல லட்சம் ரூபா பெறுமதியான ஆயுதங்களும், வெடி பொருள்களும் கைப்பற்றப்பட்டதாகவும் -

இந்திய பாதுகாப்புத்துறை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட தீவிரவாதிகளில் 235 வெளிநாட்டுக் கூலிப்படையினரும் அடங்குவார்கள் என்றும் -

கடந்த 15 நாள்களில் மட்டும் காஷ்மீரில் 65 தீவிரவாதிகளை ராணுவம் கொன்று விட்டதாகவும், அந்தச் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த வருடம் 150 அப்பாவி மக்களை தீவிரவாதிகள் படுகொலை செய்ததாகக் குறிப்பிட்டுள்ள பாதுகாப்புத்துறை, காஷ்மீரில் தீவிரவாதிகள் மீதான நெருக்குதல்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சென்ற ஆண்டு இந்திய ராணுவத்தால் கொல்லப்பட்ட காஷ்மீர் தீவிரவாதிகளின் எண்ணிக்கை 540 என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பிலிப்பைன்ஸில் பணயக்கைதிகள் விடுதலை

மணிலா,ஒக.22

பிலிப்பைன்ஸில் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகளை கடந்த 3 மாத காலமாக பணயக்கைதிகளாக வைத்திருக்கும் முஸ்லீம் தீவிரவாதிகள் 3 மலேசியர்களை விடுவித்தனர்.

இதற்கு முன்னரும் சிலரை அவர்கள் விடுவித்து நினைவிருக்கலாம்.

இறுதியாக 16 பேரை தீவிரவாதிகள் தடுத்து வைத்துள்ளனர்.

அவர்களையும் விடுவிக்க பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

# பிஜிக்கான தமது தூதுவர்களை மீண்டும் அனுப்ப இரு நாடுகள் முடிவு!

வெலிங்டன்,ஒக.22

நியூஸிலாந்தும், ஆஸ்திரேலியாவும் பிஜிக்கான தமது தூதர்களை மீண்டும் அனுப்ப முடிவு செய்துள்ளன.

நியூஸிலாந்து வெளியுறவு அமைச்சர் பில் கோவ் இதனைத் தெரிவித்தார்.

இனப் பாகுபாடற்ற அரசமைப்பின் அடிப்படையில் ஜனநாயக முறைக்கு விரைவில் திரும்புவதற்கான தெளிவான ஆதாரங்களை கராசே தலைமையிலான பிஜி அரசு வழங்க வேண்டும் என்று பில் கோவ் நியூஸிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா சார்பில் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த மே மாதம் பிஜியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை கிளர்ச்சியாளர்கள் பதவி நீக்கம் செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்க மேற்படி இரு நாடுகளும் பிஜிக்கான தமது தூதர்களை திருப்பி அழைத்துக் கொண்டமை தெரிந்ததே. (ஒ)

## வீரப்பனால் கடத்தப்பட்டுள்ள

# கோடீஸ்வர நடிகர் ராஜ்குமார் காட்டு வாழ்க்கையில் பரவசம்



சென்னை,ஒக.22

இருநூற்றிஆறு படங்களில் நடித்து, பல சுக போகங்களையும் அனுபவித்த கோடீஸ்வரரான தனக்குக் காட்டு வாழ்க்கை புதிய அனுபவமாகவும், பரவசம் ஊட்டுவதாகவும் உள்ளதாக, சந்தன மரக்கடத்தல்காரன் வீரப்பனால் கடத்தப்பட்டு காட்டுக்குள் 20நாள்களுக்கும் மேலாக பணயக் கைதியாக வைக்கப்பட்டுள்ள கன்னட நடிகர் ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

தூதர் கோபாலுடன் காட்டுக்குள் சென்றிருந்த செய்தியாளர் சிவசுப்பிரமணியத்துடன் பேசிய போதே ராஜ்குமார் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் உரையாடுகையில் -

யாருக்கும் துரோகம் செய்யாத தனக்கு எந்த வித ஆபத்தும் நிகழாதென்றும்,

சாப்பாடு, தூக்கம், உட்பட அனைத்து வசதிகளும் காட்டில் கிடைப்பதாகவும் தெரிவித்த அவர் 72 வயதாகும் தான், வீரப்பனால் கடத்தப்படுவதற்கு முன்னர் உட்கொண்டு வந்த மருந்துகளைக் காட்டில் சாப்பிடாத போதும், சுத்தமான காற்று மற்றும் இயற்கையான நிழல் ஆகியவற்றால் ஆரோக்கியமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கடத்தப்பட்ட மூன்றாம் நாள் இரவு ஓர் ஏரியின் பக்கமாக சென்று கொண்டிருந்த போது ஒரே சமயத்தில் ஆயிரக்கணக்கான தவளைகள் தாள லயத்தோடு கத்துவதைக் கேட்டு ரசித்ததாகவும்

அதைக் கண்ட வீரப்பன் மேலும் சிறிது நேரம் அங்கு தங்க அனுமதித்ததாகவும் ராஜ்குமார் கூறினார். (ஒ)

# கிரிக்கெட் சூதாட்டத்தைத் தடுக்க இந்திய வீரர்கள் மீது புதிய கட்டுப்பாடுகள்

கிரிக்கெட் பந்தயச் சூதாட்டத்தில் இந்திய அணி வீரர்கள் ஈடுபடுவதைத் தடுக்க, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை புதிய நன்னடத்தை விதிமுறைகளை அறிவித்துள்ளது. இவற்றை மீறும் வீரர்களுக்கு கிரிக்கெட்டிலிருந்து ஆயுட்காலத் தடை உட்பட பல தண்டனைகள் விதிக்கப்படும்.

இவ்வாறு பெங்களூரில் சபையின் தலைவர் ஏ.சி.முத்தையா தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணிக்குத் தெரிவாகும் வீரர்கள் நன்னடத்தைப் பிரமாணத்தில் கையெழுத்திட வேண்டும் என்று தெரிவித்த அவர்.

அந்தப் பிரமாணத்தின்படி,

போட்டி நடைபெறும் சமயத்தில் கையடக்கத் தொலைபேசியை வீரர்கள் உபயோகிக்கக்கூடாது வெளிநாட்டுச் சுற்றுப்பயணங்களின் போது தத்தமது மனைவியரை மட்டுமே உடன் அழைத்துச் செல்லலாம்.

வீரர்கள் தங்கும் விடுதி அறைகளில் விருந்தாளிகளுக்கு அனுமதியில்லை.

போட்டிகளில் கிடைக்கும் பணம், உட்பட அனைத்து வருமானங்களும் கட்டுப்பாட்டுச் சபைக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

அத்துடன் 50 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான பெறுமதியுள்ள பரிசுகளை சபைக்கு அறிவிக்க வேண்டும்.

இவை உள்ளிட்ட பல கட்டுப்பாடுகள் இந்திய கிரிக்கெட் வீரர்கள் மீது விதிக்கப்பட்டுள்ளதாக ஏ.சி முத்தையா தெரிவித்துள்ளார்.

சமீபகாலமாக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை வைத்து பந்தயங்கள் நடத்தும் சூதாட்டக்காரர்களிடம் இருந்து பணம் பெற்றுக் கொண்டு, ஆட்டங்களின் முடிவுகளை வீரர்கள் மாற்றுவதாக எழுந்த குற்றச்சாட்டுகளை அடுத்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இத்தகைய நடவடிக்கையை எடுத்துள்ளது. (ஒ)

# கிரிக்கெட் வீரர்கள் மீதான நன்னடத்தை விதிகள் குறித்து இந்தியாவில் கடும் அதிருப்தி

புதுடில்லி,ஒக.22

கிரிக்கெட் பந்தயச் சூதாட்டத்தில் இந்திய அணியினர் ஈடுபடுவதைத் தடுக்க அவர்களுக்குப் புதிய நன்னடத்தை விதிகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை விதித்துள்ளது குறித்து இந்தியாவில் கடும் அதிருப்தி எழுந்துள்ளது.

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக வீரர்கள் மீது மட்டுமல்லாது, கட்டுப்பாட்டுச் சபையின் சில உறுப்பினர்கள் மீதும் சந்தேகம் எழுந்துள்ள போதும், வீரர்களுக்கு மட்டும் நன்னடத்தை விதிகள் விதித்திருப்பதும் -

கட்டுப்பாட்டுச் சபையினர் மீதான சந்தேகங்களை நீக்க எந்தவித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படாததும், இந்தியாவில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. ஜெயலலிதா மீதான ஊழல் வழக்கொன்றில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் ஏ.சி.முத்தையா மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டும் அதிருப்தியாளர்கள், இத்தகையவரால் வீரர்களுக்கு எப்படி கட்டுப்பாடு விதிக்க முடியும் என்றும் கேள்வி எழுப்புகின்றனர்.

# முதுபெரும் பத்திரிகையாளர் இந்தியாவில் சுட்டுக்கொலை!

புதுடில்லி,ஒக.22

இந்தியாவின் மணிப்பூர் மாநிலம், இன்பாலில் முதுபெரும் பத்திரிகையாளர் ஒருவர் அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

'மணிப்பூர் நியூஸ்' என்ற பத்திரிகையின் ஆசிரியரும், மணிப்பூர் பத்திரிகையாளர் சங்கத்தலைவருமான டி.எச்.பிர்ஜாமணி சிங் என்ற 70 வயது பத்திரிகையாளரே படுகொலை செய்யப்பட்டவராவார்.

பத்திரிகை அலுவலகத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், வீட்டு வாசலில் வைத்து பிர்ஜாமணி சிங்கைச் சரமாரியாகச் சுட்டுக்கொன்று விட்டுத் தப்பிச் சென்றுவிட்டதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஒ)

## ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ,ஒக.22

ஜப்பான் தலைநகர் டோக்கியோவிலிருந்து 170 கிலோமீட்டர்கள் தூரத்தில் உள்ள தீவுகளில் முறையே 4 ரிச்டர் மற்றும் 6 ரிச்டர் அளவுகளில் இரண்டு நில நடுக்கங்கள் ஏற்பட்டதால் பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சமீபத்தில் இதே பகுதியில் 3 எரிமலைகள் வெடித்துத் தீக்குழம்பைக் கக்கியிருந்தன.

## உலக அரங்கில்

## ஜப்பானியப் பிரதமர் இந்தியா விஜயம்

பெங்களூர்,ஒக.22

ஜப்பானியப் பிரதமர் ஜொஷிரோ மோரி இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டு நேற்றுமாலை பெங்களூர் வந்து சேர்ந்தார்.

கணனி மென்பொருள் உற்பத்தியில் உலகில் குறிப்பிடத்தக்க இடம் வகிக்கும் கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூரில் ஜப்பானிய முதலீடுகள் குறித்த பேச்சுக்களில் பிரதமர் மோரி கலந்து கொள்வார் என்று கூறப்படுகிறது.

# சென்னை அரசு மருத்துவமனையில் கட்டடம் இடிந்து நோயாளி பலி!

## மருத்துவர்கள் உட்பட 13பேர் காயம்!!

சென்னை,ஒக.22

சென்னை அரசுப் பொதுமருத்துவமனையில், கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் நோயாளி ஒருவர் இடிபாடுகளுக்குள் சிக்கி உயிரிழந்தார். இரு மருத்துவர்கள் உட்பட 13 பேர் படுகாயமடைந்தனர்.

மருத்துவமனை வளாகத்தில் உள்ள கட்டடங்களில் மிகப் பழமையான இரண்டு மாடிக்கட்டடத்தின் ஒரு பகுதியே இடிந்து வீழ்ந்துள்ளது.

இக்கட்டடத்தின் ஆபத்தான நிலை குறித்தும்,

இங்கு, செயற்பட்ட மருத்துவ சிகிச்சைப் பிரிவை வேறு கட்டடத்துக்கு மாற்ற வேண்டிய அவசியத்தையும்,

மருத்துவமனை நிர்வாகம் பல முறை எடுத்துக் கூறியும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. (ஒ)

## அம்பாறையில் தமிழ்க்கட்சிகள் தனித்துப் போட்டியா?

# சுயேச்சைக் குழுவை நிறுத்த தமிழர் மகாசபை திட்டம்

கொழும்பு, ஒக 22 எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதற்குச் சுயேச்சைக் குழுவொன்றை நிறுத்துவது தொடர்பாகத் தமிழர் மகாசபை ஆலோசனை நடத்தி வருகின்றது. தமிழ் அரசியல் கட்சிகள் தனித்தனியே தேர்தலில் போட்டியிடுவதால் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதால் சுயேச்சைக் குழு ஒன்றை நிறுத்துவது பற்றி தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபைத் தலைவர் கே. சுப்பிரமணியம் தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்ற சங்கத்தின் நடவடிக்கைக் குழுக் கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபையின் மாவட்ட பொதுச்சபை உறுப்பினர்கள் தமிழர் கிராமிய பிரதிநிதிகள் அனைத்து தமிழ்க் கட்சிகளினதும் உள்ளூர்ப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய விசேட பொதுக் கூட்டத்திலே இது குறித்து இறுதி முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகவும் தமிழர் மகா சபையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நடவடிக்கை குழுக் கூட்டம் தொடர்பாக அம்பாறை மாவட்ட தமிழர் மகா சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள் சார்பில் அனைத்துக் கட்சிகளும் இணைந்து தனியொரு அமைப்பாக போட்டியிட முன்வருமாறு அனைத்து தமிழ்க் கட்சிகளிடமும் கோரியிருந்தோம்.

ஆனால் இன்று வரை ஒரு பொதுச் சின்னத்தின் கீழ் ஒரே அணியாக போட்டியிடுவதற்கு தமிழ்க் கட்சிகளின் நிபந்தனைகளோடு கூடிய நிலைப்பாடுகள் தடையாய் இருக்கின்றன. தமிழ்க் கட்சிகள் தேர்தல் களத்தில் தனித்தனியே இறங்கினால் வாக்குகள் பிரிந்து அம்பாறை மாவட்ட தமிழர்களுக்குரிய நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் 1994 ஆம் ஆண்டு தேர்தலின் பறிபோனது போன்று மீண்டும் பறிபோகும் ஆபத்துக் காணப்படுகிறது.

அம்பாறை மாவட்டத் தமிழர் மகா சங்கத்தின் ஏற்பாட்டில் கட்சி அரசியல் சாராத சுயேச்சைக்குழு வொன்றை ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளின் ஆதரவுடனும், தமிழர்களின் சார்பாகவும் தேர்தலில் நிறுத்துவதெனவும் இந்த சுயேச்சைக் குழுவிற்கு முழு ஆதரவையும் வழங்குவதாகத் தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ—6)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஒக. 22 தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த ஆத்மீக சஞ்சிகையான 'ஞானச்சுடர்' ஆவணி மாத இதழ் வெளியீட்டுவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் தொழிலதிபர் எஸ். நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

சஞ்சிகையின் வெளியீட்டுரையை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ஐ. செல்வராசாவும், மதிப்பீட்டுரையை சைவப்புலவர், சித்தாந்த பண்டிதர் கீழ்க்கரவை நவமும் நிகழ்த்துவார்கள். (ஐ—173—30)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1914 — 04 — 10 | 1999 — 09 — 03 |

### அமரர் சின்னத்தம்பி கனகரெட்ணம்

*திதி: 22—08—2000*

ஆண்டொன்று மறைந்தாலும் உங்கள் அன்பும் நினைவும் எம்மைவிட்டு என்றும் அகலாது ஐயா!


உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரிமார்.**

இல. 3, சிறாம்பியடி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (77522)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் ஐயாத்துரை கனகரட்ணம்

(லங்கா லிமிட்டெட் - சிமெந்து தொழிற்சாலை)

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 1948-12-07 | 2000-07-23 |

மயிலணி முருகன் தொண்டனாக இருந்து சீரிய பணி செய்த ஐயாத்துரை கனகரட்ணம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவுதினம் இன்று (22—08—2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு, அன்னாரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும் படியும் அத்துடன் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவின்போது வேண்டிய உதவிகள் புரிந்தோர், அஞ்சலிப் பிரசுரங்கள் வெளியிட்டோர், நேரிலும் கடிதமூலமும் ஆறுதல் தெரிவித்தோர் மற்றும் பல்வேறு வகையிலும் உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் எமது உளங் கனிந்த நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி: க. மங்களநாயகி,
பிள்ளைகள்: க. கஜந்தன், க. கஜீவன்
(யா/யூனியன் கல்லூரி மாணவர்கள்)

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (77442)

---

## பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக. 22 யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்க ஆண்டுப் பொதுக் கூட்டம் செப்ரெம்பர் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மேபல் தம்பையா மண்டபத்தில் நடைபெறும்.

பாடசாலை அதிபர் திருமதி க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்குப் பெற்றோர், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(இ-9)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 — 03 — 1921 | 23 — 07 — 2000 |

### அமரர் கனகசபை சதாசிவம்

(ஓய்வு பெற்ற சாவகச்சேரி, நகரசபை ஊழியர்)

அன்பாலும் பண்பாலும் எம்மை அரவணைத்து வையகத்தில் வாழ்வாங்கு வாழ நல்வழிகாட்டிய எம் அருமை அப்பாவே!

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு என்றும் அகலாது.

தங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

பெரிய அரசடி,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
வி ஈசுவரபாதம் (ஆசிரியர்),
கந்த முருகேசனார் வீதி,
புலோலி தெற்கு. (77506)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி மகேஸ்வரி சிவஞானம்

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1925 - 09 - 29 | 2000 - 07 - 23 |

மாதம் ஒன்று சென்றாலும் உங்கள் அன்பு முகம் மறையவில்லை — அம்மா!
ஆறாத்துயரில் எம்மை விட்டு ஆண்டவன் அடியில் சேர்ந்தீர்களே!

''தோளிலே சுமை தாங்கி
சோகத்தை கண்ணில் தாங்கி
பாசத்தோடு எம்மைத் தாங்கி
நெஞ்சினில் சுமந்த தாயே!''

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வந்து பல வழிகளில் ஆறுதல் அளித்து உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (21 - 08 - 2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகள்: ஜெயவதனா,
தம்பி: சிவம்.

''லக்சுமி விலா'',
கல்வளை,
சண்டிலிப்பாய். (77185)

உதயன்

## இப்படியும் ஓர் இறுக்கமா?

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்க்கை சம்பந்தமான அலுவல்களுக்குப் போடப்படும் கட்டுப்பாடுகள், தடைகள் மேன்மேலும் அதிகரித்து வருகின்றன.

வன்னிக்கு - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கு - அங்கு வாழும் குடிமக்களுக்கு -உணவு, மருந்து உட்பட்ட பாவனைப் பொருள்கள் போதியளவு அனுப்பப்படுவதில்லை என்பது கடந்த பல வருட விவகாரம். இது சர்ச்சைக்குரிய விடயமாகவும் மாறிவிட்டது.

வன்னியில் வாழும் மக்களின் சனத்தொகைக்கு ஏற்ப அங்கு அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன. அந்தந்தப் பிரதேச அரச அதிகாரிகள் தரும் புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே அந்தப் பொருள்கள் அனுப்பப்படுகின்றன என்று அரசாங்கத் தரப்பு நிலைநாட்ட முயல்கிறது.

இப்போது அனுப்பப்படும் அளவுக்குக் கூடுதலாகப் பொருள்களை அனுப்பினால் அவை விடுதலைப் புலிகளின் கைக்குப் போய்ச் சேர்ந்துவிடும் என்பது அரசாங்கத்தின் வாதம். ஆனால் பல சந்தர்ப்பங்களிலும் அரசாங்க அதிகாரிகளும், வன்னியில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்களும் உணவு, மருந்து மற்றும் பாவனைப் பொருள்களுக்குப் பற்றாக்குறை, தட்டுப்பாடு இருக்கவே செய்கிறது என்று எடுத்துக் காட்டியுள்ளனர்.

இந்த விவகாரத்துக்கு முடிவில்லாமல் நீடித்துக் கொண்டிருக்கையில், மேலும் பல கட்டுப்பாடுகள், தடைகள், இறுக்கமான விதிகள் புதிது புதிதாகப் போடப்படுகின்றன. வன்னியிலிருந்து வவுனியா செல்வோர் அங்கு தமது அலுவல்களைப் பார்ப்பதற்குப் போதிய அவகாசம் இல்லாமற் செய்யும் பாஸ் முறை, நிரந்தரப் பாஸ் வழங்குவதற்குக் கடும் விதிகள் பல என்பன இவற்றில் அடங்கும். வன்னிப் பகுதிக்கு ஒருவர் பத்தாயிரம் ரூபாவுக்கு மேல் கொண்டு செல்ல முடியாது என்ற ஆகப் பிந்திய கட்டுப்பாட்டுக்குப் பின்னர் இன்னொன்று புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

வன்னி, பெரும் விவசாயப் பிரதேசம். ஆனால் அந்தத் தொழிலைச் செய்வதற்கான வாய்புகள், வசதிகள் அங்கு மிகமிக அருகிவிட்டன. அதனால்அங்கு தொழில் வாய்ப்புகளும் பொருளாதாரமும் நலிந்து போயுள்ளன. விலைவாசிகளோ யாழ்ப்பாணத்தை விடவும் மிக அதிகம். இத்தகைய சூழ்நிலையில் ஒருவருக்கு - ஒரு குடும்பத்துக்கு - இரண்டு மூன்று மாதங்களுக்கு பத்தாயிரம் ரூபா எவ்வாறு போதும்? மாதாந்தம் வவுனியா சென்று வர அனுமதியும் இல்லை.

வன்னியில் இருந்து அவசரமாக, மேலதிக சிகிச்சைக்காக வவுனியாவுக்குக் கொண்டு செல்லப்படும் நோயாளர்கள் "வீடியோ" படம் பிடிக்கப்பட்ட பின்னரே, தீவிர சோதனைக்கு உட்படுத்திய பின்னரே, வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதி பெற முடியும். பிரமணாளங்குளம் சோதனைச் சாவடியில் நீண்ட நேரத்தை வீணாக்கிய பின்னரே, ஒரு நோயாளிக்குரிய சிகிச்சையைத் தாமதிக்கும் விதத்தில் இந்தப் புதிய கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பாதுகாப்புக் காரணம் என்ற போர்வையை மூடி, தமிழ் மக்களின் - வன்னி வாழ் மக்களின் - பல அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மறுத்து வருகிறது. அவசர சிகிச்சைக்குச்செல்லும் நோயாளியை வழியில் மறித்து அவருக்குரிய சிகிச்சையைத் தாமதிப்பது உயிராபத்து விளைவிப்பதற்கு ஒப்பானதாகும்.

இந்தக் கட்டுப்பாடு, கடந்த சில வருடங்களாக' வன்னி மக்களைப் போரின் போது ஆயிரக் கணக்கில் கொன்றது போதாதென்று மறைமுகமாகக் கொல்லும் உத்தியா என்ற சந்தேகம் எழுவதில் என்ன தப்பு? இப்படியும் மனிதாபிமானமற்ற ஓர் இறுக்கம் அவசியம் தானா?

# சங்கீத, நடன பட்டதாரிகளுக்கும் மீள் நேர்முகப் பரீட்சை நடக்கும்

யாழ்ப்பாணம்,ஓக.22

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கும் திட்டத்தின் கீழ் இசை மற்றும் நடனம் ஆகிய துறைகளில் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களுக்கும் மீள்நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு ஆசிரிய நியமனம் வழங்கப்படவுள்ளது.

1998 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியோருக்கே மீண்டும் எதிர்வரும் 25 ஆம் திகதி யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

ஐ.ரவிச்சந்திரன்(வரணி), ரி.தயாலட்சுமி(மட்டுவில்), என்.பத்மராணி (இணுவில்), ஏ.ஸ்ரீகாந்தரூபி(இணுவில்), ஆர்.ரூபினி(திருநெல்வேலி), ஈ.தேவகுமாரி(நல்லூர்), ரி.கோசலா (கரவெட்டி), ரி.தயாமதி(கைதடி), எஸ்.அனுஜா(சண்டிலிப்பாய்).

எம்.காதாம்பரி(சுதுமலை), ஆர்.சுபாதினி (மீசாலை), எஸ்.விமலா (திருநெல்வேலி), வி.மேரி புஸ்பமாலா(ஆனைக்கோட்டை), எஸ்.சத்தியா (நல்லூர்),எம்.தயாளினி (கோப்பாய்),எம்.பிரேமாலினி(கோண்டாவில்),பி.பாமினி(கரவெட்டி), எஸ்.பாலச்சந்திரன்(நாவாந்துறை, றோ.க.வித்தியாலயம்), என்.குசலகுமாரி (கொட்டடி),

எம்.சசிகலா(கொக்குவில்), ரி.ஜெயந்தினி(கொழும்பு), எஸ்.அருணதேவி(கரவெட்டி), ரி.சரலா (கொழும்பு), எம்.தயாளினி (கொழும்புத்துறை),எஸ்.நிர்மலா(மொரட்டுவ), என்.கௌரி(திருநெல்வேலி), பி.வசந்தமலர்(தெகிவளை),

வி.கோசலகுமாரி(மட்டுவில்), பி.யோகேஸ்வரி(வட்டுக்கோட்டை), ஜி.சுபத்திராதேவி(வவுனிக்குளம்), எஸ்.சுஜாத்தா(கொழும்புத்துறை), என்.நளாயினி(நல்லூர்), ரி.சாமினி (திருகோணமலை), எம்.ஜெயலட்சுமி (சாவகச்சேரி), கே.பத்மராணி(முல்லைத்தீவு), ரி.மகேஸ்வரன்(கரவெட்டி) (ஐ-7)

## கண்ணன் அவதாரம் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஓக.22

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நடைபெற்றுவரும் மஹோற்சவத்தில் தினமும் அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவர் 'கண்ணன் அவதாரம்' என்னும் பொருளில் சொற்பொழிவு ஆற்றி வருகிறார். இந்த மஹோற்சவத்தில் தேர் உற்சவம் நாளை புதன்கிழமையும் தீர்த்தோற்சவம் மறுநாளும் நடைபெறவுள்ளன.

## அன்பளிப்பு

கொழும்புத்துறை,ஓக.22

மானிப்பாய் கட்டுடை முகாமில் உள்ள 82 குடும்பங்களுக்கு 'யுனிசெவ்' நிறுவனத்தினால் அண்மையில் விளக்குகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ஐ-30)

# சங்கிலி அறுத்த வழக்கில் சிப்பாய் ஒருவருக்குச் சிறை

நெல்லியடி,ஓக.22

கொடிகாமம் - மிருசுவில் பகுதியில் இடம்பெயர்ந்து வசித்து வந்த இளம்பெண் ஒருவரின் கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியை அறுத்த இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு 4 மாத கடூழிய சிறைத் தண்டனையும், 2மாத சிறைத் தண்டனையும் சாவகச்சேரி மாவட்ட நீதிவானால் விதிக்கப்பட்டது.

கொடிகாமம் பொலீஸாரினால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் குற்றம் சாட்டப்பட்டிருந்த கேகாலையைச் சேர்ந்த குறித்த இராணுவச் சிப்பாய் குற்றச்சாட்டுக்களை நீதிமன்றில் ஏற்றுக்கொண்டதன் பேரில் குறித்த தண்டனை விதிக்கப்பட்டது.

சங்கிலியை அபகரித்த குற்றச்சாட்டுக்காக 4 மாத கடூழிய சிறைத் தண்டனையும், அபகரித்த சங்கிலியை தன்வசம் வைத்திருந்த குற்றத்துக்காக 2 மாத சிறைத்தண்டனையுமாக மொத்தம் 6மாத சிறைத் தண்டனையை விதித்து சாவகச்சேரி மாவட்ட நீதிவான் தீர்ப்பு வழங்கினார். (இ-109)

# மழையை அடுத்து வயல்கள் உழுது பண்படுத்தப்படுகின்றன

அண்மையில் பண்டத்தரிப்பு, மாதகல், சண்டிலிப்பாய்ப் பகுதிகளில் பலத்த மழை பெய்ததை அடுத்து காலபோக நெல் விதைப்புக்கு ஏற்ற வகையில் வயல்கள் விவசாயிகளால் உழுது பண்படுத்தப்பட்டு வருகின்றன.

நல்ல ரக விதை நெல்லைப் பெறுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அதேசமயம் பண்டத்தரிப்புப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய இடங்களிலுள்ள சங்கத்தின் கிராமிய வங்கிகளில் குறிப்பிட்டளவு சேமப்பணம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு எதிர்வரும் காலபோக நெற்செய்கைக்கான கடனுதவியை வழங்குவதற்கு முடிவு செய்துள்ளது.(இ-135)

# நல்லூர்க் கந்தன் தேரையொட்டி நயினையிலிருந்து பாத யாத்திரை

## இந்த வருடமும் நடத்த ஏற்பாடு

நல்லூர்க் கந்தன் இரதோற்சவத்தையொட்டி ஆண்டு தோறும் சப்த தீவக திவ்ய ஜீவன சங்க சமாசத்தால் நடத்தப்படும் நயினை நல்லூர் பஜனை யாத்திரை வழமை போன்று இந்த வருடமும் நடைபெறும்.

எதிர்வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை நயினை ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பூசை, பஜனை நடைபெறும். மறுநாள் சனிக்கிழமை காலை 8 மணிக்கு வேலுடன் யாத்திரை ஆரம்பமாகும்.

அன்றையதினம் யாத்திரைக்குழு குறிகாட்டுவான் ஸ்ரீ மனோன்மணி ஆலயத்தில் தங்கி மதியம் புங்குடுதீவில் உள்ள பல ஆலயங்களைத் தரிசிக்கும்.

இரவு புங்குடுதீவில் தங்கியிருந்து விட்டு மறுநாள் ஞாயிறு அதிகாலை புறப்பட்டு வேலணையை அடையும். அங்குள்ள ஆலயங்களைத் தரிசித்து மதியம் வேலணை வங்களாவடி முருகன் ஆலயத்தில் பூசை வழிபாடுகளை முடித்துக் கொண்டு அங்கிருந்து புறப்படும். பின்னர் மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு, பண்ணை, கோட்டை வழியாக மாலை யாழ்.சத்திரத்துச் சந்தி ஞானவைரவர் ஆலயத்தை வந்தடையும்.

அங்கு நடைபெறும் விசேடபூசை வழிபாட்டைத் தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தைச் சென்றடையும்.

இரவு அங்கே தங்கும் பஜனை யாத்திரைக்குழு மறுநாள் திங்கள் அதிகாலை புறப்பட்டு, கந்தர்மடம் உதய நாகபூஷணி அம்பாள் ஆலயத்தைச் சென்றடைந்து அங்கு இடம்பெறும் வழிபாட்டைத்தொடர்ந்து கந்தர்மடம் வழியாக நல்லைக் குமரன் சந்நிதானத்தை சென்றடையும்.

நல்லூர்க் கந்தன் தேரின் போது யாழ். திவ்ய ஜீவன சங்கத் தலைவர் சி.கனகரெத்தினம் தலைமையில் பஜனை நடைபெறும். (இ-15-173)

## தீக்காயங்களால் மரணம்

குடும்பத்தகராறு காரணமாக தனக்குத் தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டி எரிகாயங்களுடன் கடந்த 12ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத காரணத்தினால் கடந்த சனியன்று அங்கு மரணமானார்.

மயிலங்காட்டைச் சேர்ந்த குணேஸ்வரன் பவானி (வயது 31) என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவர் தீ மூட்டிய போது இவரைக் காப்பாற்ற முற்பட்ட சமயம் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் இவரது கணவனும் யாழ்ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். (ஐ-9-15)

### உதயவாக்கு


உயிர் வாழ்வதற்காக ஓடும் கோழைகள் மாண்டு போகிறார்கள் என்பதையும், இறப்பதற்காகப் போராடும் வீரர்கள் என்றென்றும் உயிர் வாழ்கிறார்கள் என்பதையும், அவர்களது இறப்பானது நமக்குச் சான்று சொல்லுகின்றது.

*- வீர சாவர்க்கார்*

### நாளை

ஆவணி 7
புதன்கிழமை
*திதி:* அட்டமி
முற்பகல் 8.33 வரை.
*நட்சத்திரம்:* ரோகிணி
பின்இரவு 3.46 வரை.
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி தினம்
*சுபநேரம்:* 4.35 - 6.05
*ராகுகாலம்:* 12.05 - 1.35
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## கார்த்திகை நாதா காத்திட வருக!

கார்த்திகை நாதா காத்திட வேண்டும்
காரியம் யாவும் நிறைவேற்றிட வேண்டும்
நேர்த்திகள் உனக்கு ஆயிரம் வைத்தோம்
நிரந்தர தீர்வினைத் தந்திட வேண்டும்
ஏத்தியே நாளும் முறையிட்டுக் கேட்கிறோம்
ஈழவர் கோரிக்கை ஏற்றிட வேண்டும்
போற்றியே உன்னுடன் வாழ்ந்திட வேண்டும்
புதிய தீர்வது தமிழர் வசம் வரவேண்டும்.

மதுரகவி காரை.
*எம்.பீ.அருளானந்தன்*

## நலம் தரும் நல்லூரெம் நாதன்

கடிகமழும் தண்தார்க் கடம்பு தோன்றும்
கன்னி வார்குழலார் மருங்கு தோன்றும்
வடிவொளிய சுடர்விடு நெடுவேல் தோன்றும்
வானாடு கோனாள வைத்தவழி தோன்றும்
கொடிதாய வெஞ்சூர் குணமும் மாறக்
கொண்டருளும் திருப்பெரு வடிவம் தோன்றும்
நடித்தாண்ட நினைப்புன நாடகம் தோன்றும்
நலம்தரும் நல்லூரெம் நாத னார்க்கே

ஆறுபடை வீடுதரும் அருளும் தோன்றும்
ஔவைக்கு அருள் உருவான நாவல் தோன்றும்
ஆறுமுகத்தில் ஆறுருவான அழகு தோன்றும்
ஆரலர் சரவணத்தில் ஆடல் தோன்றும்
ஆறுமுகம் ஒருருவாக அம்மை ஆக்கி
அருளாரமுதம் பொழியும் அன்பு தோன்றும்
ஆறுமுகன் அண்ணனோடு அருங்கனியும் தோன்றும்
அருள்தரும் நல்லூரெம் நாத னார்க்கே.

*- சிவ.சண்முகவடிவேல்*
(ஏழாலை)

## ஆறுதல் தர ஓடிவாராயோ!

அசுரர் குலம் அழித்த அருள் முருகா
அண்டமெல்லாம் காத்திட்டாய் அருள் முருகா
அடியோம் யாம் அலறுகின்றோம் நிம்மதிதேடி
ஆறுதலை அளித்திட ஓடி வாராயோ

ஆறடி நிலமேனும் எமக்கு இன்றி
ஆறுபோல் ஓடி ஓடி அலைகின்றோம்
ஆற்றலுடன் நாம் பெற்ற செல்வமெல்லாம்
ஆர்வமுடன் காத்திடவே வாராயோ

இரவிரவாய் இடிமுழக்கம் போல ஒலி
இடியேறு கேட்ட நாகம் போல் எம் வாழ்க்கை
இரக்கமுடன் விடை பகர யாரும் இல்லை
இனியவனே இடர் நீக்க வாராயோ

*- பருத்திநகர். வ.மார்க்கண்டு*

## சூழ்ந்த வினை தீராயோ?

ஆறுபடை வீடோனே கந்தவேளா - எம்
ஆக்கினைகள் தீர்த்திடுவாய் முருகவேளா!
நல்லூரில் வீற்றிருக்கும் ஞானவேலா
நம் துயர் களைந்திடாயோ தங்கவேலா.....?

பிரணவத்தின் பொருளுரைத்த சுவாமிநாதா!
பல்குழல்* சத்தம் கேட்கலையோ பழனிவேலா...?
சூரனை வதம் செய்த சுந்தரவேலா - எமை
சூழ்ந்த வினை தீராயோ எழில்வேலா...?

*- சி.சிவகௌரி*
மட்டுவில் - வடக்கு

# இந்தோனேசியாவில் அதிகாரப் பகிர்வு!



அதிகாரப் பகிர்வு செய்துகொண்ட ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட்டும் உபஜனாதிபதி சுகர்ணபுத்ரி மேகவதியும்.

இந்தோனேசியாவில் நிலவி வரும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் முயற்சியாக ஜனாதிபதி அப்துல் ரஹ்மான் வாஹிட் உப ஜனாதிபதி மேகவதி சுகர்ண புத்ரியுடன் அதிகாரப் பகிர்வுக்கு இணங்கி உள்ளார். கடந்த சில மாதங்களாக இந்தோனேசிய நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி வாஹிட்டுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இழுபறி நிலைமை இருந்து வந்தது. அதிகாரப் பகிர்வு மூலம் இதற்கு தற்காலிகமாக தற்போது தீர்வு காணப்பட்டுள்ளது.

அதிகாரப் பகிர்வுக்கு இணங்க ஜனாதிபதி வாஹிட்டிடம் நாட்டின் வெளிவிவகாரம், தேசிய ஐக்கியம் மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகள் சம்பந்தமான துறைகள் இருக்கும். நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு மேகவதியிடம் விடப்பட்டுள்ளது.

## நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பு மேகவதியிடம்

கடந்த 9 மாத கால ஆட்சியில் ஜனாதிபதி வாஹிட் படிப்படியாக தனது ஆதிக்கத்தை நாடாளுமன்றத்தில் இழந்திருந்தார். கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெறுவதற்கு உதவிய கட்சிகள் அவரைக் கைவிட்டதே இதற்குக் காரணம்.

நாடாளுமன்றத்தில் மக்கள் விழிப்புக் கட்சியின் ஆதரவு மட்டுமே ஜனாதிபதி வாஹிட்டுக்கு தற்போது இருந்து வருகிறது. 1998இல்தான் இந்தக் கட்சி உருவாக்கப்பட்டது. ஜனாதிபதி வாஹிட்டே இதனை உருவாக்கி இருந்தார். இந்தக் கட்சிக்கு நாடாளுமன்றத்தில் பதினொரு சதவீத ஆசனங்கள் மட்டுமே உள்ளன. இந்தோனேசிய அரசமைப்பின் படி நாடாளுமன்றமே ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும்.

தேர்தலில் மேகவதி சுகர்ண புத்ரியின் இந்தோனேசிய ஜனநாயகக் கட்சிக்கு 33.7 சதவீதமான ஆசனங்கள் கிடைத்திருந்தன. எனினும் முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோவின், கோல்கார் கட்சியும் மற்றும் முஸ்லீம் கட்சிகளும் வாஹிட்டை ஆதரித்ததன் காரணமாக ஜனாதிபதியாவதற்குத் தேவையான பெரும்பான்மை வாக்குகள் நாடாளுமன்றத்தில் மேகவதிக்குக் கிடைக்கவில்லை.

**இந்தோனேசியாவில் சுகார்ட்டோவின் 30 வருடகால ஆட்சி கவிழ்க்கப்படுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் மேகவதி சுவர்ண புத்ரி. எனினும் கடந்த ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அவரது கட்சியினால் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்ற முடியாமற்போனது. பொதுமக்களிடமிருந்து அவர் ஓரளவுக்கு அந்நியப்பட்டிருந்ததும் இதற்கு ஒரு காரணம் என்று கூறப்படுகின்றது.**

இந்தோனேசியாவின் ஸ்தாபகரும் முதலாவது பிரதமருமான சுகார்னோவின் மகளான மேகவதிக்கு, தற்பொழுது செய்துகொள்ளப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு நல்ல அரசியல் எதிர்காலத்தை ஏற்படுத்தி இருப்பதாக அவதானிகள் கருதுகின்றனர்.

அதேசமயம் இந்த அதிகாரப் பகிர்வு ஆபத்தாகவும் முடியலாம் என்று கூறப்படுகிறது. நாட்டை நல்ல முறையில் இவர் வழிநடத்திச் செல்லுவாரானால் இவருக்கு நல்ல அரசியல் எதிர்காலம் ஏற்படும். ஆனால் இதில் தோல்வி அடைவாரானால் அரசியலில் இருந்தே அவர் தூக்கி வீசப்பட்டுவிடுவார். பின்னர் மீளமுடியாது.

கடந்த 9 மாதகாலம் மேகவதி உபஜனாதிபதி பதவி வகித்தபோதிலும் அவரது திறமையைப் பரீட்சிக்கும் வாய்ப்பு நாட்டுக்குக் கிடைக்கவில்லை. நாடு எதிர்நோக்கிய முந்திய பிரச்சினைகளில் கருத்துத் தெரிவிக்காமல் அவர் மௌனம் சாதித்து வந்தார். ஆனால் தற்பொழுது ஏற்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு அவர் தொடர்ந்து மௌனம் சாதிக்க முடியாத நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

### நம்பிக்கை மோசடிக் குற்றச்சாட்டு

ஜனாதிபதி வாஹிட்டுக்கு எதிராக நம்பிக்கை மோசடிக்குற்றச்சாட்டுகளும் சுமத்தப்பட்டுள்ளன. மனிதாபிமான பணிகளுக்காக புரூனி சுல்தான் வழங்கிய நிதியை ஜனாதிபதி துஷ்பிரயோகம் செய்துவிட்டதாகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. நிதியைப் பெற்றதை வாஹிட் ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் தமக்கு அது நன்கொடையாகக் கிடைத்தது என்று அவர் வாதாடுகிறார்.

அதிகாரப் பகிர்வு ஏற்படாது, மேகவதியின் இந்தோனேசிய மக்கள் கட்சியும் அரசாங்கத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்படாவிடில் இந்த விவகாரத்தை வைத்து வாஹிட்டின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஒன்பது மாதத்துக்கு முன்னர் நாட்டின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாக வாஹிட் பதவி ஏற்றபோது மக்கள் பெரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். 40 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக இவர் ஜனநாயக ரீதியில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

எனினும் தமது 9 மாத கால ஆட்சியில் பல நெருக்கடிகளை அவர் எதிர்நோக்கி வந்தார். நிதிப் பொறுப்புக்களைப் பிராந்தியங்களுக்குப் பரவலாக்குவதில் அவர் கடைப்பிடித்த கொள்கைகள் பெரும் எதிர்ப்பை ஏற்படுத்தி இருந்தன. அத்துடன் இந்தோனேசிய மாநிலங்கள் சிலவற்றில் பிரிவினைவாத உணர்வுகள் அதிகரித்திருந்தன. ஆசே, ஈரியன்ஜயா, மொலூக்காஸ் மாநிலங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளை அவர் கையாண்ட விதம் குறித்துக் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

### மக்கள் ஆதரவு மேகவதிக்கே

மேகவதியைப் பொறுத்தவரை அடி மட்டத்தில் உள்ள பெரும்பாலான மக்களின் நம்பிக்கையைப் பெற்றவர். முன்னாள் ஜனாதிபதி சுஹார்ட்டோவின் ஆட்சிக் காலத்தில் அரசியலில் இருந்து இவரை ஒழித்துக்கட்ட மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் எல்லாவற்றையும் வெற்றிகரமாகத் தாக்குப்பிடித்தவர். சென்ற வருடம் நடைபெற்ற தேர்தலில் இராணுவத்தின் அட்டூழியங்களை எல்லாம் சமாளித்து வெற்றியீட்டியவர். அதனால்தான் அவர் உப ஜனாதிபதியாக முடிந்தது. தற்போதைய அதிகாரப் பகிர்வு மேகவதியின் அரசியல் எதிர்காலத்துக்கு ஓர் அக்கினிப் பரீட்சை என்றே கூறப்படுகின்றது.

### 2 முக்கிய நிகழ்வுகள்

இந்தோனேசியாவில் இரு முக்கிய தினங்கள் இம்மாதம் அனுஷ்டிக்கப்படுகின்றன. ஓகஸ்ட் 17ஆம் திகதி இந்தோனேசியாவின் சுதந்திர தினம். ஓகஸ்ட் 30 ஆம் திகதி கிழக்குத் திமோர் மக்கள் தனி நாட்டுக்கு ஆதரவாக வாக்களித்த தினம். கடந்த ஆண்டு இதே நாளில் கிழக்குத் திமோரில் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் இந்தோனேசியாவில் இருந்து பிரிந்து தனிநாடாவதற்கு ஆதரவாக கிழக்குத் திமோர் மக்கள் வாக்களித்திருந்தனர்.

தற்பொழுது தனிநாடாக உள்ள கிழக்குத் திமோரில் அரசியல் ஸ்திரமின்மையை ஏற்படுத்த இந்தோனேசிய அரசு சதி செய்வதாக ஜனாதிபதி வாஹிட்டுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் கிழக்குத் திமோரில் ஐ.நா. அமைதிப் படையைச் சேர்ந்த நேபாள வீரர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு மேற்குத் திமோர் எல்லையில் வாழும் இந்தோனேசிய ஆதரவு ஆயுதபாணிகளே காரணம் என்று கிழக்குத் திமோரில் உள்ள ஐ.நா. அமைதிப்படையின் தலைமை அலுவலகம் குற்றஞ்சாட்டி உள்ளது.

கிழக்குத் திமோர் - மேற்குத் திமோர் எல்லையில் மேற்குத் திமோரில் உள்ள அகதி முகாம்களில் இருந்து கிழக்குத் திமோருக்குள் ஊடுருவிச் சென்று ஆயுதபாணிகள் தாக்குதல் நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மேற்குத் திமோர் இந்தோனேசியாவின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. எல்லையில் இருந்து இயங்கும் ஆயுதபாணிகளைக் கட்டுப்படுத்தும்படி இந்தோனேசியாவுக்கு சர்வதேச நாடுகள் தற்பொழுது நெருக்கடி கொடுத்து வருகின்றன. 1950ஆம் ஆண்டு ஹொலந்திடமிருந்து இந்தோனேசியா சுதந்திரம் அடைந்த போது மேற்குத் திமோர் ஹொலந்தின் கட்டுப்பாட்டிலும் கிழக்குத் திமோர் போர்த்துக்கலின் கட்டுப்பாட்டிலும் இருந்தன. இந்தோனேசியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்ட போது மேற்குத் திமோர் தானாகவே இந்தோனேசியாவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டுவிட்டது.

உலக உலா

என்.பி.சீலன்

கிழக்குத் திமோரில் தற்பொழுது 32 நாடுகளைச் சேர்ந்த 8 ஆயிரம் ஐ.நா.அமைதிப்படையினர் நிலை கொண்டுள்ளனர். மேற்குத் திமோரில் உள்ள இந்தோனேசிய ஆதரவு - கிழக்குத் திமோர் பிரிவினைக்கு எதிரான - ஆயுதபாணிகள் கிழக்குத் திமோருக்குள் ஊடுருவி நடத்தும் தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும் என்று ஐ.நா. பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி வாஹிட் செல்வாக்கு இழப்பதற்கு கிழக்குத் திமோர் சம்பவங்களும் ஒரு காரணமாகும். ★



இந்தோனேசியாவில் சுஹார்ட்டோவின் ஆட்சிக்கு முடிவு கட்டிய அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

# யூகோஸ்லாவியாத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு யாருக்கு?

## மிலோசேவிக்குக்கு ஆதரவாக தேர்தல் சட்டம் திருத்தம்

அடுத்த மாதம் 24ஆம் திகதி யூகோஸ்லாவியாவில் தேர்தல்கள் நடத்தப்பட உள்ளன. சேர்பியாவில் நடைபெறும் தேர்தலில் வெற்றி பெற்று மூன்றாவது தடவையாக ஜனாதிபதி பதவியை வகிக்கும் முயற்சியில் சேர்பிய ஜனாதிபதி ஸ்லோபோடன் மிலோசேவிக் ஈடுபட்டுள்ளார்.

அணிசேரா நாடுகளின் தந்தை என்று அழைக்கப்பட்ட மார்ஷல் டிட்டோவின் காலத்தில் யூகோஸ்லாவியா 6 குடியரசுகளைக் கொண்ட ஒரு சமஷ்டி அமைப்பாக இருந்து வந்தது. 1990 முற்பகுதியில் கம்யூனிஸம் வீழ்ச்சி அடைந்து உலகில் பனிப்போர் முடிவுக்கு வந்தபோது, அதன் தாக்கம் யூகோஸ்லாவியாவிலும் ஏற்பட்டது.

ஸ்லோவேனியா, குரோசியா, பொஸ்னியா, மசெடோனியா ஆகிய சமஷ்டிப் பிரிவுகள் யூகோஸ்லாவியாவில் இருந்து பிரிந்து தம்மைத் தனிநாடுகளாகப் பிரகடனம் செய்தன. யூகோஸ்லாவிய சமஷ்டிக் குடியரசில் சேர்பியாவும் மேற்கு நாடுகளுக்கு ஆதரவான மொண்ரேநெக்ரோவும் மட்டுமே எஞ்சின. தற்பொழுது மொண்ரேநெக்ரோவும் பிரிந்து தனிநாடாக முயற்சிக்கிறது.

அடுத்த மாதம் யூகோஸ்லாவியாவில் நடைபெறும் தேர்தலை பகிஷ்கரிக்கப் போவதாக மொண்ரேநெக்ரோ ஜனாதிபதி மிலோடியூகானோவிக் அறிவித்துள்ளார். முன்பு சமஷ்டி அமைப்பில் இருந்து விலகிய குடியரசுகளில் உள்ள சேர்பிய இனத்தவர்களின் ஆதரவுடன் அகண்ட சேர்பிய நாடு ஒன்றை உருவாக்குவதே சேர்பிய ஜனாதிபதி மிலோசேவிக்கின் திட்டம். பொஸ்னியாவிலும் கொசோவோவிலும் ஏற்பட்ட இன அழிப்புகளுக்கு இதுவே காரணம்.

தற்பொழுது மொண்ரேநெக்ரோ சேர்பியாவுடன் அரசியல் நெருக்கடி ஒன்றுக்குள் சிக்கிக் கொண்டுள்ளது. ஸ்லோவேனியா, குரோசியா, பொஸ்னியா, மசெடோனியா போன்று நான்கும் யூகோஸ்லாவிய சமஷ்டி அமைப்பில் இருந்து விலகப்போவதாகவும் இதற்காக சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தப்போவதாகவும் மொண்ரேநெக்ரோ ஜனாதிபதி அச்சுறுத்தி வருகிறார்.

மொண்ரேநெக்ரோவும் விலகிக் கொண்டால் யூகோஸ்லாவிய சமஷ்டியில் சேர்பியா மட்டுமே எஞ்சி



மிலோசேவிக்

இருக்கும். சமஷ்டி என்ற பெயருக்கே அர்த்தம் இல்லாது போய் விடும்.

மிலோசேவிக் மீண்டும் பதவிக்கு வரும் விதத்தில் யூகோஸ்லாவியாவில் தேர்தல் சட்டங்கள் திருத்தப்பட்டுள்ளன. தேர்தலை பகிஷ்கரிக்கப் போவதாக சேர்பியாவில் உள்ள எதிர்க்கட்சிகளும் மிரட்டி வருகின்றன.

தேர்தலைக் கண்காணிப்பதற்கு வெளிநாடுகளில் இருந்து தேர்தல் கண்காணிப்புக் குழுக்களை வரவழைக்கப்போவதாக மிலோசேவிக் கூறி வருகிறார். ஆனால் நடு நிலைமையான நட்பு நாடுகளில் இருந்தே கண்காணிப்புக் குழுக்கள் வரவழைக்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. யூகோஸ்லாவியாவின் நட்பு நாடுகள் தற்பொழுது சர்வாதிகார ஆட்சி நடைபெற்றுவரும் ஈராக்கும் மியான்மரும்தான். யூகோஸ்லாவியாவில் முன்னர் நடைபெற்ற தேர்தலின்போதும் சர்வதேச தேர்தல் கண்காணிப்பாளர்கள் வருகை தந்திருந்தனர். தேர்தலில் மோசடிகள் இடம்பெற்றதாக அவர்களின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்புவதற்கே தனது நட்பு நாடுகளிடமிருந்து தேர்தல் கண்காணிப்புக் குழுக்களை வரவழைக்க மிலோசேவிக் திட்டமிட்டு வருகிறார்.

செப்ரெம்பர் 24 தேர்தலில் மிலோசேவிக்குக்கு எதிராக பொது வேட்பாளர் ஒருவரை நியமிக்க எதிர்க்கட்சிகள் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அந்த முயற்சி கைகூடவில்லை.

ஏற்கனவே தமக்குச் சாதகமாக மிலோசேவிக் தேர்தல் சட்டங்களைத் திருத்திக் கொண்டுள்ளார். தற்பொழுது எதிர்க்கட்சிகளும் பிளவுண்ட நிலையில் மிலோசேவிக்கின் வெற்றி தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது.

# தென்மராட்சி மக்களின் இடம்பெயர்வால் கல்விச் செயற்பாடுகளில் பெரும் பாதிப்பு!

சாவகச்சேரி, பளை ஆகிய கல்விக் கோட்டங்களை உள்ளடக்கி 71 பாடசாலைகளை நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டிருந்த தென்மராட்சி கல்வி வலய அலுவலகம் மீண்டும் ஆரம்பத்திலிருந்து தொடங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை கல்விச் சமூகத்தையே அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. எதிர்பாராத இடம்பெயர்வினால் வலய அலுவலகத்திலிருந்து எந்தவொரு பொருளையும் கொண்டுவர முடியாத நிலையில் வெறுங்கையுடன் வெளியேறி வடமராட்சி, நெல்லியடி, மருதனார்மடம் ஆகிய இடங்களிலும் வலிகாமம் பகுதிகளிலும் இரவல் தளபாடங்களுடன் அலுவலகங்களை அமைத்துள்ளபோதிலும் இதர தேவைகளுக்கு அடுத்தவரின் கையை நம்பியிருக்க வேண்டிய நிலையில் அலுவலகத்தின் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது.

வலய அலுவலகத்தில் இருந்த கணனி இயந்திரங்கள், போட்டோஸ்ரட் இயந்திரங்கள், மின்பிறப்பாக்கி உட்பட அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா அலுவலர்கள் ஆகியோரின் ஆயிரத்துக்கு மேற்பட்ட சுயவிவரக்கோவைகள், பதிவேடுகள், அலுவலகக் கோவைகள், வேலைப் பகுதியின் கோவைகள் - பதிவேடுகள், நிதிப் பிரிவின் பதிவேடுகள், கோவைகள் அனைத்தும் கைவிடப்பட்ட நிலையில் மீட்க முடியாததால் வலய அலுவலகத்தின் செயற்பாடுகளைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டிய நிலையில் உள்ளது.

வலய பாடசாலைகளில் உள்ள 927 ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் கைவிடப்பட்டுள்ளதால் இவர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி, பதவி உயர்வு போன்றவை உரிய காலத்தில் வழங்க முடியாத கஷ்டங்கள் ஏற்படலாம். அத்துடன் ஆசிரியர்களின் கல்விச் சான்றிதழ்கள் உட்பட பல ஆவணங்கள் சுயவிவரக்கோவையில் வைக்கப்பட்டிருப்பதால் இந்த ஆவணங்களின் மூலப்பிரதிகள் பெற்றுக்கொள்ளக் கால தாமதம் ஏற்படலாம். இதனால் பல சிக்கல்களை ஆசிரியர்கள் சந்திக்க வாய்ப்புண்டு. வலய அலுவலகத்தினால் தற்போது ஆசிரியர்களின் சுயவிவரக் கோவைகள் தயாரிக்கப்பட்டு வருகின்ற போதிலும் அவை முழுமையான வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை குறைவாகவே உள்ளது. சுயவிவரக் கோவையில் பல ஆவணங்களின் மூலப்பிரதிகள் இணைக்கப்பட்டுள்ளதால் இணைப்பிரதிகள் கைவசம் வைத்திருக்காதவர்கள் வீட்டில் வைத்திருந்த ஆவணங்களைக் கைவிட்டு வந்தவர்களுக்கு முழுமையான சுயவிவரக்கோவைகள் தயாரிக்க முடியாத நிலை தோன்றக்கூடும். இந்த நிலையில் ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்ச்சி, பதவி உயர்வுகள் கிடைக்கக் காலங்கள் பல செல்லலாம். அத்துடன் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கும் இந்த அவல நிலைதான். அண்மையில் ஓய்வுபெற்றுச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா அலுவலர்கள் ஆகியோரின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் பெற்றுக் கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட கோவைகளும் கைவிடப்பட்டு வந்ததால் அவற்றுக்குப் பதிலாகப் புதிய படிவங்கள் தயாரிப்பதற்கு புதிய சுயவிவரக்கோவைகள் தேவை என்பதால் ஓய்வுபெற்றவர்களிடமிருந்தும் பல விவரங்களைக் கோரி புதிய கோவை தயாரிக்க வேண்டிய நிலை வலய அலுவலகத்துக்கு ஏற்பட்டுள்ளது.

## நிதி ஆவணங்களும் முடக்கம்

அடுத்து வலய அலுவலகத்தில் செயற்பாட்டுக்குத் தேவையான நிதிப் பிரிவின் காசேட்டுப் புத்தகங்கள் கைவிடப்பட்டுள்ளதால் நிதிச்செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்ல முடியாமல் உள்ளன. இந்தப் பதிவேடுகள் இல்லாததால் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசாரா அலுவலர்கள் ஆகியோரின் சம்பளங்கள் உட்பட அனைத்துக் கொடுப்பனவுகளையும் உரிய நேரத்தில் வழங்க முடியாத நிலை வலய அலுவலகத்துக்கு ஏற்பட்டுள்ளது. ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வலயத்தினால் வழங்கப்பட்ட சம்பள ஏற்றக் கடிதத்தினை அடிப்படையாகக் கொண்டு சம்பளங்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், இவ்வாறான கடிதங்களைக் கைவிட்டு வந்த ஆசிரியர்களுக்கு உரிய சம்பளங்களின் பகுதி முற்பணமாக வழங்கப்படுகிறது.

**செய்தி மடல்**

இந்த நிலையில் வலய ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள நிலுவை வழங்குவதற்குரிய கட்டுநிதி வந்துள்ளதால் இதனை உடனடியாக வழங்குவதற்கு முடியாதநிலை உள்ளது. இருப்பினும் வலய கல்விப் பணிப்பாளரின் முயற்சியின் பேரில் மாகாணக் கல்வி அமைச்சிற்கு அனுப்பப்பட்டபட்டியின் பிரகாரம் சம்பள நிலுவைக் கொடுப்பனவை விரைவில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

## பாடசாலை செல்லாத மாணவர்கள்

இடம்பெயர்வுக்கு முன்னர் வலய அலுவகத்தினால் திரட்டப்பட்ட புள்ளி விவரங்களின்படி 71 பாடசாலைகளிலும் 22ஆயிரத்து 462மாணவர்கள் கல்வி பயின்றதாகவும், தற்போது மேற்கொண்ட தரவுகளின்படி, தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் 18 ஆயிரத்து 490 மாணவர்கள் மட்டுமே கல்வியைத் தொடருவதாகவும் தெரியவருகிறது.

இந்தப் புள்ளிவிவரங்களின் படி எஞ்சிய 3ஆயிரத்து 968மாணவர்களில் பாடசாலைகளைவிட்டு வெளியேறிய மாணவர்களும், இதுவரை பாடசாலைகளுக்குச் செல்லாத மாணவர்களும் அடங்குவர் எனத் தெரியவருகிறது. தற்போது கல்வி கற்கும் மாணவர்களில் வடமராட்சிப் பகுதியில் இயங்கும் 9 தென்மராட்சிப் பாடசாலைகளில் 3ஆயிரத்து 70 மாணவர்களும் -

வலிகாமத்தில் இயங்கும் 7 தென்மராட்சிப் பாடசாலைகளில் 2 ஆயிரத்து 137 மாணவர்களும் -

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் இயங்கும் 13 பாடசாலைகளில் 3 ஆயிரத்து 287 மாணவர்களும் -

வடமராட்சி வலய பாடசாலைகளில் இணைப்புப் பாடசாலைகளாக இயங்கும் பாடசாலைகளில் 5 ஆயிரத்து 157 மாணவர்களும் -

வலிகாமம் வலயப் பாடசாலைகளில் இணைப்புப் பாடசாலைகளாக இயங்கும் பாடசாலைகளில் 3 ஆயிரத்து 583 மாணவர்களும் -

யாழ்ப்பாணம் வலயப் பாடசாலைகளில் இணைப்பு பாடசாலைகளாக இயங்கும் பாடசாலைகளில் ஆயிரத்து 256 மாணவர்களும் -

கல்விபயில்கின்றனர்.

வலிகாமம் பகுதியில் பிரதேச ரீதியில் பார்க்கும் போது யாழ் பிரதேசத்தில் 86 மாணவர்களும், நல்லூர் பிரதேசத்தில் 220 மாணவர்களும் கோப்பாய் பிரதேசத்தில் 950 மாணவர்களும், சண்டிலிப்பாய பிரதேசத்தில் ஆயிரத்து 73 மாணவர்களும் சங்கானை பிரதேசத்தில் 860 மாணவர்களும், தெல்லிப்பழை பிரதேசத்தில் 703 மாணவர்களும், உடுவில் பிரதேசத்தில் ஆயிரத்து ஒரு (1001) மாணவர்களும் இணைப்புப் பாடசாலைகளில் கல்வி பயில்கின்றனர்.

இதேவேளை தென்மராட்சிப் பகுதிகளில் இயங்கும் பின்வரும் 13 பாடசாலைகளில் பின்வரும் எண்ணிக்கையின் படி 3 ஆயிரத்து 287 மாணவர்கள் கல்வி கற்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

எழுதுமட்டுவாழ் வடக்கு அ.த.க-200, மிருசுவில் வடக்கு அ.த.க-520, வரணி ம.வி-477, விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்-379, போக்கட்டி அ.த.க-49, கெற்பலி அ.த.க-137, குடமியன் அ.த.க. பாடசாலை-260, கரம்பை அ.மி.த.க-45, வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம்-106, வரணி வடக்கு அ.த.க-57, கரம்பைக்குறிச்சி அ.த.க-238, இடைக்குறிச்சி சுப்பிரமணிய வித்தியாலயம்-324, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி-495.

மூன்றாம் தவணை தொடக்கம் கச்சாய் அ.த.க.பாடசாலையும் இயங்கவுள்ளது.

தென்மராட்சி பகுதிகளில இருந்து இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள் பலர் இப் பாடசாலைகளில் இணைந்துள்ளதால் சில பாடசாலைகளில் முன்னரைவிட இரு மடங்கு மாணவர்கள் கல்வியை தொடர்கின்றனர். இப் பாடசாலைகளுக்கு ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்ட போதிலும் போதிய தளபாட வசதிகள் இல்லாததால் மாணவர்களுக்கு மர நிழல்களில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் இணைப்பு பாடசாலைகளாகச் செயற்படும் தென்மராட்சி பாடசாலைகள் மாலைநேர வகுப்புகளையே நடத்தி வருகின்றன. இப் பாடசாலைகளின் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களுக்குச் செல்வது தடைப்படுவதால் காலை நேர வகுப்புக்களை நடத்துமாறு பல பெற்றோர் வலய அலுவலகத்துக்கு முறையிட்டுள்ளனர். இப்பாடசாலைகளில் தற்காலிக வகுப்பறைக் கொட்டில்களை அமைக்க முயற்சிகள் மேற் கொள்ளப்பட்ட போதிலும் மாணவர்களுக்கான தளபாடங்கள் இல்லாத நிலையில் அதனைச் செயல்படுத்த முடியவில்லை, இதனைக் கருத்திற் கொண்டு சில பாடசாலைகளை தனியார் கல்வி நிலையங்களில் நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு இயங்கி வருகின்றன.

இடம்பெயர்வுக்கு முன்னர் விண்ணப்பம் செய்யப்பட்ட ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை, ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்கு தோற்றும் மாணவர்கள் தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் தங்கியிருந்ததால் பரீட்சை நிலையங்களை வடமராட்சி பகுதியில் நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் வலிகாமம் பகுதி மாணவர்களின் நலன் கருதி வலிகாமம் பகுதியில் இரு பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டன. ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 754 மாணவர்கள் தோற்றுவதனால் வலிகாமம் பகுதியில் தங்கி உள்ள 233 மாணவர்களுக்காக வலிகாமம் பகுதியில் இரு பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் 159 மாணவர்களே அங்கு பரீட்சைக்குத் தோற்றுவதனால் பரீட்சை நிலையம் ஒன்றாகக் குறைக்கப்பட்டது. வடமராட்சியில் அமைக்கப்பட்டுள்ள 7 பரீட்சை நிலையங்களில் 595 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இதேபோன்று ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு விண்ணப்பித்த ஆயிரத்து 62 மாணவர்களில் 252 மாணவர்களே வலிகாமம் பகுதியில் பரீட்சைக்குத் தோற்ற விருப்பம் தெரிவித்திருந்ததால் சுன்னாகம், கொக்குவில் ஆகிய இடங்களில் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டன. தற்போது தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் கல்வி கற்கும் மாணவர்களில் 70க்கும் மேற்பட்ட வீதமான மாணவர்கள் (11ஆயிரத்து 514 மாணவர்கள்) தென்மராட்சி வடமராட்சிப் பகுதியில் கல்வி கற்கின்றனர்.

## கற்பித்தல் உபகரணங்கள் கைவிட்ட நிலையில்

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த 17 பாடசாலைகள் தவிர்ந்த 54 பாடசாலைகளில் உள்ள கற்பித்தல் உபகரணங்கள், தொழில்நுட்பபாட உபகரணங்கள், கணனி இயந்திரங்கள், தட்டச்சு, றோணியோ இயந்திரங்கள், அலுவலக உபகரணங்கள், தளபாடங்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் கைவிடப்பட்டு மீட்க முடியாத நிலையில் உள்ளன. வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுடன் பாடசாலைகளின் ஆவணங்களையும் மீட்பதற்கு வலய அலுவலகத்தினர் அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ள போதிலும் இதுவரை ஆக்கபூர்வமான முடிவுகள் கிடைக்கவில்லை.

ஐ.கிருஷ்ணன்
(தென்மராட்சிச் செய்தியாளர்)

தென்மராட்சிப் பகுதியில் இயங்குகின்ற பாடசாலைகளில் நிலவும் தளபாடப் பற்றாக்குறையை தீர்க்க படையினரின் கட்டுப்பாட்டில் இயங்க முடியாத நிலையில் உள்ள பாடசாலைகளில் இருந்து எடுத்துக் கொடுப்பதற்கும், தற்போது படையினரின் பாவனையில் உள்ள மிருசுவில் றோமன் கத்தோலிக்க பாடசாலையை மீளப் பெற்று இயங்க வைப்பதற்கும் தென்மராட்சி பகுதி பாடசாலைகளின் நலன் கருதி வரணி ஆசிரியர் நிலையத்தில் வலய உப அலுவலகம் விரைவில் திறப்பதற்கும் வலய அலுவலகத்தினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது.

# பக்தி மார்க்கத்தை வளர்க்கும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்

**நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 34 ஆவது பீடாரோஹணவிழா இன்றாகும். அதனையொட்டி இச் சிறப்புக்கட்டுரை பிரசுரமாகிறது.**

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்ற ஆத்மீகச் சிந்தனையை வளர்த்துத் தமிழின் அருமையையும் சமயத்தின் பெருமையையும் கூறி உலகெல்லாம் அருள் நெறியைப் பரப்புவதைத் தனது தலையாய கடமையாகக் கொண்டிருந்த ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களால் 1966 ஆவணி 6 ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டதே இன்று 34 ஆவது பீடாரோஹண விழாக்காணும் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம் ஆகும்.

எல்லோராலும் அன்புடன் 'முத்தமிழ்மணி பாகவதர்' என அன்று அழைக்கப்பட்ட சுவாமிகளுக்கு சிறுவயதிலிருந்து திருஞான சம்பந்தப் பெருமானுடைய சம்பந்தம் கிடைத்தபடியால் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் இலங்கையில் நிறுவப்பட்டது. இன்று இலங்கையிலேயே முதன்மை வகிக்கக் கூடிய பிரபல்யம் மிக்க ஒரு நிறுவனமாக இவ்வாதீனம் விளங்கி ஆற்றிவரும் அளப்பரிய அறப்பணிகள் என்றென்றும் அழியாதவைகளாகும்.

'மேன்மைகோள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்' என்ற வகையில் தெய்வ பக்தியை வளர்ப்பது அன்பு,அருள்,பண்பு நெறிகளையும் ஞானத்தையும் பரப்புவது, அவ்வகைகளில் ஆர்வமுடையோருக்கு வழிகாட்டுவது மற்றும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற இந்து சமயப் பண்பாட்டிற்கு அமைவாக இனபேதமின்றி மக்கள் பணி, சமயப் பணி, கல்விப்பணி, கலை கலாசாரப் பணி, சுகாதாரப்பணி ஆகிய துறைகளிலே தொண்டாற்றுவது போன்ற குரு பகவான் ஸ்ரீ சுவாமி நாதத் தம்பிரான் சுவாமிகளின் பேரவாவை நல்லை ஆதீனம் சிரமேற் கொண்டு குரு அருள், இறை அருள் துணையால் நிறைவேற்றி வருகின்றது. இவ்வாதீனம் நமது யாழ்ப்பாண மக்களின் வரப்பிரசாதம் என்று கூறினால் மிகையாகாது.

தெய்வீகம், நல்லொழுக்கம், குருபக்தி, இறைபக்தி, சத்தியம், கருணை, எளிமை உயர்ந்த இலட்சியங்கள் ஆகியவை நல்லை ஆதீனத்தின் அடிபூற்றுக்களாகும். குழந்தைக் கல்வி, ஆரம்பக்கல்வி, இளைஞர் முதியோர் சமயக் கல்வி, இந்து கலாசாரக் கல்வி என்ற வகையில் ஆத்மீக ஒழுக்க மேம்பாட்டை இணைத்து நமது சைவத்துக்கும், தமிழுக்கும் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் பற்பல அரிய சேவைகளை இவ்வாதீனம் இன்று ஆற்றி வருகின்றது. தேவாரம் ஓதுதல், கோலம் போடுதல், யோகாசனப் பயிற்சி, சமய தீட்சை, சைவ சமய வகுப்புக்கள், மாணவர்களை ஊக்குவிக்கும் நிகழ்வுகள் போன்ற பணிகளைச் செய்கின்றமை போற்றற்குரியது.



இரண்டாவது குரு மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள்

சமூகஜோதி
கா. கணேசதாசன்

சைவ ஒழுக்க நெறிகைவரப் பெறச் சைவப்பிள்ளைகளுக்குச் சிறுவயது முதலே சமயக் கல்வி ஊட்டப்பட வேண்டும். சிவனருட் செல்வர்களது சரித்திரத்தைக் கற்றலும் அவர்கள் அருளிய திருவருட்பாக்களை ஓதுதலும் சமயக் கல்வியின் முக்கிய அங்கங்களாகும். இந்த உண்மையை உணர்ந்து சிறுவர்களுக்காகிய அறநெறி வகுப்புக்களை நடத்துவதுடன் இளைஞர்களுக்கு மனிதப் பிறவி எடுத்த ஆன்மா கடைப்பிடிக்க வேண்டிய சைவப்பயிற்சிகளான விரத அனுட்டானம், விபூதி தரித்தல், திருவைந்தெழுத்து ஓதல், சிவாலய வழிபாடு, திருவுருவ வழிபாடு, குரு வழிபாடு போன்றவற்றின் முக்கியத்துவத்தையும் பயனையும் இவ்வாதீனத்தில் எடுத்துக்கூறி பயிற்சியளிக்கின்றனர்.

தங்களது பிள்ளைகளின் எதிர்கால வாழ்வு நெறிதவறிச் சீரழியாமல் பக்தி நெறியை அறிந்து உணர்ந்து, வன்செயல்களில் ஈடுபடாது வாழ்வாங்கு வாழ்வதற்கு ஆதீனப் பணிகளில் ஈடுபட வைப்பது பெற்றோரின் மகத்தான பங்காகும்.

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனம் அன்னதானப் பணிமூலம் உடற்பசியை நீக்குவதுடன் அறிவுப் பசியை நீக்கும் வகையில் கலை, கலாசாரம், பண்பாடு, சைவசமயம் சம்பந்தமான நூல்வெளியீடுகளையும் செய்து வருகின்றது.

இக்கலியுகத்தில் பக்தி மார்க்கமே கடைப்பிடிக்க உகந்தது என்பதை இளைஞர் மத்தியில் ஊறிய வைத்து ஆத்மீகம் வளர தன்னா

(8ஆம் பக்கம் பார்க்க)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## வீடு விற்பனைக்கு

யாழ். கச்சேரிக்கு அருகில் கச்சேரி நல்லூர் வீதியில் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு. நேரடித் தொடர்புக்கு: திருமதி S. படியலிங்கம், 38, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

(77485)

## விற்பனைக்கு

நல்லைக்குமரன் மலர், துர்க்கா தேவஸ்தான வெளியீட்டு நூல்கள், சைவ பரிபாலன சபை வெளியீட்டு நூல்கள், ஔவையார் அருளிய நூல்கள் இன்னும் பல சைவநீதி நூல்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். (77512)

நல்ல நிலையில் உள்ள பாவனைக்குகந்த வீட்டுத் தளபாடங்கள், சமையலறைப் பாவனைப் பொருள்கள் என்பன விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். முகவரி: வே.க. சண்முகராசா, மே/பா திரு.எஸ். விஜயரெட்ணம், இல. 75, குறுக்கு வீதி, நல்லூர்.

(77513)

வீட்டுப் பாவனைப் பொருள்கள் (தளபாடங்கள், மின் இலத்திரனியல் சாதனங்கள்), கொண்டா ஜெனரேற்றர் 1k.w(ஜப்பான்), நீர் இறைக்கும் இயந்திரம் villiers 12/1Hs (இங்கிலாந்து) என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ. சிவபாலன், கலைமணி வீதி, (முத்துமாரி அம்மன் கோயில் அருகில்) கட்டப்பிராய். (77520)

## தவறிவிட்டது

கலைமகள் வீதி, காங்கேசன்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தையா ஞானச்சந்திரன் என்பவரது தேசிய அ.அட்டை (740572016v), விசேட அ.அட்டை (0907015293), பல்கலைக்கழக அ.அட்டை 95/c 11 என்பன 05.08.2000 அன்று நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து சுன்னாகத்தில் இயங்கும் காங்கேசன்துறை தபாலகத்தில் ஒப்படைத்துதவவும். அல்லது மேற்குறித்த முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கவும்.

(77516)

எம். தேவதாசன் என்ற பெயருடன் D.L 198970 இலக்கமுடைய வாகன லைசன்ஸ் புத்தகமும், சில ஆவணங்களும் மானிப்பாய் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 07, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில ஒப்படைத்து உதவவும்.

(77526)

பாரதி வீதி, நாயன்மார்கட்டைச் சேர்ந்த புஸ்பமணி சின்னத்தம்பி என்பவரது தேசிய அ.அ. (இல. 316450555v) திருநெல்வேலிக்கும், பொற்பதி வீதிக்கும் இடையில் 13.08.2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நேதாஜி சனசமூக நிலையம், பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77519)

## புதிய முகவரி

எனது கட்சிக்காரர்களின் நலன் கருதி எனது புதிய முகவரியைக் கீழே அறியத்தருகிறேன்.

**த. வேலாயுதம்,**
சட்டத்தரணி,
*கோகுல வீதி (டிப்போ முன்பாக),*
*கோண்டாவில்.*

* வியாழக்கிழமைகளில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றிலும் தொடர்பு கொள்ளமுடியும். (77511)

## 30ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 28 - 02 - 1929

உதிர்வு 24 - 07 - 2000

**திருமதி தியாகராசா சரஸ்வதி**
(ஆச்சியம்மா)

மாதம் ஒன்று ஆனதம்மா!
மறக்கவில்லை உங்கள் முகம்
திங்கள் ஒன்று சென்று விட்டதம்மா
தீரவில்லை எம் துயரம்.
பெற்ற எம்மைத் தவிக்கவிட்டுப்
பிரிந்து நீங்கள் சென்றதேனோ?
மலர்ந்த உங்கள் முகத்தைக் காண
மனம் துடிக்கும் மருமக்கள் கூட
வளர்த்த பேரப்பிள்ளைகளும்
வருந்தி இங்கு அழுகின்றார்கள்.
நெஞ்சை விட்டு நீங்கவில்லை
நிதமும் உங்கள் நினைவலைகள்.

இன்று (22.08.2000) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

*சுழிபுரம் கிழக்கு,*
*சுழிபுரம்.* (77483)

## மிதிவெடியில் கால் இழப்பு

யாழ்ப்பாணம்,ஓக.22

தோட்டத் திருத்த வேலைக்குச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்குண்டு இடது காலை முழங்காலுக்குக்கீழ் இழந்து படுகாயமடைந்தார்.

வளலாயில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் சிவபாதம் ரசிதரன்(வயது 20) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஜ-15)

## பிரதேச செயலகத்துக்குக் கட்டடம்

காரைநகர்,ஓக.22

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கு புதிய நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட உள்ளது.

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு அருகில் அமைக்கப்பட உள்ள இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் இன்னும் இரு வாரங்களில் நடப்பட உள்ளது.

தற்போது இப்பணிமனை தற்காலிக கட்டடத்திலேயே இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஜ-73)

## கேணி துப்புரவு

காரைநகர்,ஓக.22

காரைநகர் நீலிப்பந்தனை கேணி நீண்டகாலத்திற்குப் பின்னர் சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 12 வருடங்களுக்கு மேலாகத் துப்புரவு செய்யப்படாமல் இருந்த இந்தக் கேணி காரைநகர் பகுதி இளைஞர்களால் கடந்த சனிக்கிழமை சிரமதானப் பணி மூலம் இறைத்து துப்புரவு செய்யப்பட்டுள்ளது. (ஜ-73)

## பக்தி மார்க்க.........

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

லான மட்டும் உழைத்த முதலாவது குருமஹா சந்நிதானத்தின் நற்சேவைகளைப் பின்பற்றி இரண்டாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமச்சாரிய சுவாமிகள் நற்சேவைகள் பல புரிந்து வருகிறார். பற்பல கலாசார, சமய பண்பாட்டுத்துறை சார்ந்த விடயங்களில் அக்கறை காட்டி சைவ மக்களின் மனதில் இடம் பிடித்துக் கொண்டுள்ளார். மக்கள் மத்தியில் இறை நம்பிக்கையை ஊட்டி வருகின்றார்.

இன்று நடைபெறும் விழாவில் அவரது தெய்வீக திரு அருட்பொலிவைக் காணலாம். "என்றும் வேண்டும் இன்ப அன்பு" என்னும் உயர்ந்த சமய நெறியைப் பரப்பி வரும் சற்குருவாகிய இவரை இன்று வணங்கி குருவருளும் இறை அருளும் வாழ்வில் பெற்று உய்தி பெறுவோமாக. "தெளிவு குருவின் திருமேனி காணல்" என்பது திருமூலர் வாக்கு.

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**கந்தப்பு ஜெயராஜா (வின்சன்)**
(முன்னாள் வட. தெற்கு/மேற்கு பிரதேச சபை உறுப்பினர், த.ம.வி.க.)

எமது குடும்ப ஒளிவிளக்கின் மரணச் செய்தியறிந்து துயருற்றிருந்த வேளை நேரில் வந்து ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மரணச்சடங்கில் கலந்து கொண்டும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதிய போசன விருந்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

*கரவெட்டி கிழக்கு,*
*கரவெட்டி.* (77517)

**மனைவி, தந்தை, தாய், சகோதரர்கள்.**

## ஆறாம் ஆண்டில் ஆறாத்துயருடன்



குரும்பசிட்டி

**திருமதி கனகசுந்தரம் விக்கினேஸ்வரி**

ஜனனம் 1946-02-22

மரணம் 1994-08-29

திதி: 22-08-2000

**அன்பில் பண்பில் அரும்பிய தீபம்**
**என்றும் எம்முன் அணையாத தீபம்.**

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**கணவர், சகோதரர், சகோதரிகள், உற்றார் உறவினர்.**

*68, மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(77515)

## 90ஆம் நாள் நினைவலைகள்



**மகேஸ்வரி தில்லைநாதன்**
மண்ணில்
10-02.1948

ஜெயேந்திரநாதன்
மண்ணில்
15.04.1978

விண்ணில்
24.05.2000

**அம்மா! நீ பாரினில் உதித்து அறுவரை ஈன்றாய்**
**1990, 1998இல் உன் கணவரையும் மகனையும் இழந்தாய்**
**2000ஆம் ஆண்டு உன் மைந்தனையும் கூட்டி இவ்வுலகில் வாழ விரும்பாது**
**விண்ணகம் சென்றாயோ?**
**அம்மா உன் ஆசைப் பேரன்மார் அம்மம்மாவைத் தேடும்போது எம் இதயம் குமுறுதம்மா.**

இன்று (22.08.2000) செவ்வாய்க்கிழமை நடைபெறும் எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

*பழைய விலாசம்:*
*திக்கம்புரை,*
*வயாவிளான்.* (77408)

*தற்காலிக விலாசம்:*
*'வேலகம்'*
*இராச வீதி,*
*அச்சுவேலி.*

# வானொலி பவளவிழாப் போட்டி; நாடகத்தில் ஐவருக்குப் பரிசு

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவை அதன் பவளவிழாவை முன்னிட்டு நடத்திய நாடக ஆக்கப் போட்டியில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஐந்து பேருக்கு பரிசுகள் கிடைத்துள்ளன.

யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை, சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த வைரமுத்து சின்னையா, சங்கத்தானையைச் சேர்ந்த செல்வி பிறேமினி சபாரத்தினம், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த எஸ். நடராசா, யாழ்ப்பாணம் இராமநாதன் வீதியைச் சேர்ந்த வி. சிவபாலன் ஆகியோரே பரிசு பெற்ற நாடக ஆசிரியர்களாவர்.

இவர்களுக்கான பரிசுகள் செப்ரெம்பர் மாதம் இரண்டாம் திகதி கொழும்பு பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெற உள்ள இலங்கைஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையின் பவளவிழாக் கொண்டாட்டங்களின் போது வழங்கப்படஉள்ளன. (ஐ-152)

# அடையாள வேலை நிறுத்தம்

சம்பள நிலுவை வழங்கல் உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக் கழகங்களில் கல்விசாரா ஊழியர்கள் இன்று மேற்கொள்ளும் அடையாள வேலைநிறுத்தத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் இன்று போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

நீர், மின் விநியோகம், பாதுகாப்புப் பிரிவு மற்றும் பரீட்சை நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்கள் தவிர்ந்த ஏனையோர் இதில் பங்குபற்றுவர். (ஐ-3)


# வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைத் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்த காரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி:- 2000-08-30 — 3.00 மணி வரை.
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 2000-09-01 — 10 மணி வரை.
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி:- 2000-09-01 — 10.30 மணி (அச்சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
5. மீளளிக்கப்படக்கூடிய ஒப்பந்த வைப்புப் பணமாக ஒப்பந்தத் தொகையில் 5% வைப்பிலிட வேண்டும்.
6. மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் |
|---|---|---|---|
| 1. | சில்லாலை மத்திய ச.ச. நிலைய புனரமைப்பு | 1,000/- | 200/- |
| 2. | காக்கைதீவுச் சுடலை எரிக்கும் மேடை. கொட்டகை அமைத்தல் | 1,000/- | 200/- |
| 3. | நவாலி சென். பீற்றர்ஸ் சவக்காலை மடம் அமைத்தல் | 1,000/- | 200/- |
| 4. | பெரியவிளான் சென். அன்ரனீஸ் முன்பள்ளி பாடசாலை திருத்தம் | 1,500/- | 200/- |
| 5. | திருவள்ளுவர் சேவாமன்றம் ச.ச. நிலைய புனரமைப்பும் தளபாடம் வழங்கலும் ஆனைக்கோட்டை | 500/- | 200/- |
| 6. | சாவற்கட்டு கலையரங்கம் புனரமைப்பு | 1,500/- | 200/- |
| 7. | அன்னம்மாள் ச.ச. நிலையம் அமைத்தல், இளவாலை | 1,500/- | 200/- |
| 8. | நவாலி வடக்கு ச.ச. நிலைய முன்பள்ளி பாடசாலைக் கட்டடம் புனரமைப்பு | 500/- | 200/- |
| 9. | நவாலி முரசொலி ச.ச. நிலைய திறந்தவெளி அரங்கு பகுதி III புனரமைப்பு | 500/- | 200/- |
| 10. | இளவாலை பழனி ஆனந்தன் ச.ச. நிலையம் அமைத்தல் | 500/- | 200/- |
| 11. | காக்கைதீவு மாதிரிக் கிராம முன்பள்ளிப் பாடசாலை கட்டட புனரமைப்பு | 1,000/- | 200/- |
| 12. | மாதகல் சந்தை அமைத்தல் | 2,000/- | 200/- |
| 13. | கலப்பரகிரி ச. ச. நிலைய புனரமைப்பு மாரீசன்கூடல் | 500/- | 200/- |
| 14. | காந்திஜி ச. ச. நிலையம் மாதகல் கட்டட விஸ்தரிப்பு | 500/- | 200/- |
| 15. | சரஸ்வதி ச. ச. நிலைய புனரமைப்பு பிரான்பற்று | 500/- | 200/- |
| 16. | யாவில் குளம் கிணறு அமைத்தல் ஆனைக்கோட்டை | 1,500/- | 200/- |
| 17. | மாகியப்பிட்டி வள்ளுவர் ச. ச. நிலைய கட்டடம் அமைத்தல் | 1,000/- | 200/- |
| 18. | ஐயனார் கோயில் வீதி புனரமைப்பு சண்டிலிப்பாய். | 2,000/- | 200/- |
| 19. | பொன்னாலை 1ஆவது ஒழுங்கை புனரமைப்பு | 1,500/- | 200/- |
| 20. | குமுதினி முன்பள்ளி பாடசாலை புனரமைப்பு சாவற்கட்டு | 500/- | 200/- |
| 21. | சென்ஜேம்ஸ் ச. ச. நிலையம் அமைத்தல், இளவாலை | 1,000/- | 200/- |
| 22. | கட்டுவை ச. ச. நிலைய முன்பள்ளி பாடசாலை கட்டடம் அமைத்தல். | 500/- | 200/- |
| 23. | மாகியப்பிட்டி சூரியோதயா ச. ச. நிலைய புனரமைப்பு. | 1,000/- | 200/- |
| 24. | கலைவாணி ச. ச. நிலைய மலசல கூடத் திருத்தம் வடிவமைப்பு. | 500/- | 200/- |
| 25. | சிறுவர் பூங்கா திருத்தம் ஆனைக்கோட்டை. | 1,000/- | 200/- |
| 26. | சங்கானை மேற்கு அம்மன் வீதி திருத்தம். | 500/- | 200/- |

(பிரான்சிஸ் விக்டர்)
செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
மானிப்பாய்.

(வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன்)
ஜே. பீ. யூ. எம்.
தலைவர்
வலிகாமம் தென்மேற்கு
பிரதேச சபை.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
தலைமைச் செயலகம்,
நகர மண்டபம், மானிப்பாய்.
21. 08. 2000

(சி/12584)


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 22

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் கடந்த 7 ஆம் திகதி முதல் இடம்பெற்றுவரும் வருடாந்த உற்சவத்தில் நாளை புதன் கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஐ-30-173)

★ ★ ★

ஸ்ரீகிருஷ்ண ஜெயந்தி தினம் நாளையாகும்.

இந்தத் தினத்தை ஒட்டி பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயம், வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயம், கோப்பாய் வடக்கு ஸ்ரீசக்கராழ்வார் திருக்கோயில், அல்வாய் வடக்கு ஆதிவீரபத்திரசுவாமி கோயில், கோண்டாவில் கிழக்கு ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானம் ஆகியவற்றில் விசேட உற்சவங்கள் ஏற்பாடாகியுள்ளன. உறியடி உற்சவமும் இடம்பெறும். (-3-30-173)

★ ★ ★

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசாமி கோயிலில் ஸ்கந்த ஹோம அஷ்டோத்தர சத கலச அபிஷேகம் இன்று காலை 6மணி முதல் இடம் பெறவுள்ளது.

ஸ்கந்தஹோமம், சண்முகர் அர்ச்சனை ஆகியனவும் இடம் பெறும். (ஐ-3)

★ ★ ★

அல்வாய் குமிழடிப் பிள்ளையார் ஆலய அலங்கார உற்சவம் நாளை புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

உற்சவ காலத்தில் தினமும் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெறும். (ஐ-117)

★ ★ ★

அராலி வடக்கு மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில் சங்காபிஷேக தண்டிகை உற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ-173-30)

★ ★ ★

தென்புலோலி மூச்சம் பலம் அருள் மிகு ஸ்ரீசிவன் திருக்கோயிலில் நடைபெற்று வந்த திருவிளையாடற் புராணபடனம், அர்ச்சனைப் படனப்படிப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் பூர்த்தியடைந்துள்ளன.

இன்று செவ்வாய்க்கிழமை விசேடபூசை, வழிபாடும் நந்திமடையுடன் இந்த நிகழ்வு நிறைவுபெறும். (ஐ-30)

★ ★ ★

கோப்பாய் வடக்கு அருள் மிகு ஸ்ரீ சக்கராழ்வார் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாளை 23 ஆம் திகதி புதன் கிழமை பகல் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, உறியடி உற்சவம் ஆகியன இடம் பெறும். (ஐ-30)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் மேற்கு வீதி முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் பிற்பகல் 5 மணி முதல் 6 மணி வரை கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'மகாபாரதம்' இசைச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'முதல்மரியாதை' என்னும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (ஐ-3)

★ ★ ★

வடபிராந்திய இந்துப் பேரவையின் ஏற்பாட்டில் அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெற்றுவரும் தெய்வீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'சமயக் கிரியைகள்' என்னும் தலைப்பில் பிரம்மஸ்ரீ கை. திருஞானசம்பந்தக் குருக்கள் உரை நிகழ்த்துவார். (ஐ-3)

# பலியானோர் விவரம் சேகரிப்பு

தென்மராட்சி, ஓக. 22

தென்மராட்சியில் அண்மையில் இடம்பெற்ற யுத்தத்தின் போது அப்பகுதிக்குள் அகப்பட்டுப் பலியான தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விவரங்கள் வலயக் கல்வி அலுவலகத்தினால் சேகரிக்கப்படுகின்றன.

யுத்த அனர்த்தங்களினால் பலியான அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரில் தங்கியிருந்த உரித்தாளர்கள் உடனடியாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இயங்கும் வலயக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

# பாராட்டு விழா

யாழ்ப்பாணம். ஓக. 22

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான மஹோற்சவத்தை நடத்திய பிரதமகுரு சிவப்பிரம்மஸ்ரீ சிவசுரேஸ்வரக் குருக்களைப் பாராட்டிப் பட்டமளிக்கும் வைபவம் இன்று காலை 10 மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)


# மரண அறிவித்தல்

## நல்லதம்பி தில்லைநாதன் (இந்திரன்)

சிறுப்பிட்டி வடக்கு, வயிரவர் கோயிலடியைச் சேர்ந்த நல்லதம்பி தில்லைநாதன் (இந்திரன், லான்ட் மாஸ்ரர் உரிமையாளர்) அவர்கள் நேற்று (21-08-2000) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரோஜாவின் அன்புக் கணவரும் தங்கம்மா, செல்வராஜா (புலவர், டோகா), இராஜேந்திரம் (டோகா), மகேந்திரன், பொன்னுத்துரை (ஜேர்மனி), சுப்பிரமணியம், பவளம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-08-2000) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் குடும்ப மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ந. மகேந்திரன்
(சகோதரன்)
சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

(சி/12587)



யாழ். றோட்டறிக் கழகத்தின் 60 ஆவது தலைவர் பதவியேற்பு வைபவம் அண்மையில் கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. புதிய தலைவரான றோட்டேரியன் அ.பஞ்சலிங்கத்திடம் முன்னாள் தலைவர் றோட்டேரியன் கே.ஸ்ரீபதி சின்னம் அணிவித்து பதவிப் பொறுப்பை ஒப்படைப்பதை முதல் படத்தில் காணலாம். வைபவத்தில் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்ட யூறோவில் நிறுவனப் பணிப்பாளர் பொறியியலாளர் எம்.ராமதாஸ் அருகில் அமர்ந்துள்ளார்.

றோட்டறிக் கழகத்தில் புதிய உறுப்பினராகச் சேர்ந்து கொண்ட றோட்டேரியன் செல்வி பத்மலதா பத்மநாதனுக்கு றோட்டேரியன் திருமதி சாந்தா குணரட்ணம் சின்னம் சூட்டுவதை அடுத்துள்ள படத்தில் காணலாம்.

படங்கள்: பொ.இராஜேஸ்வரன

# நாவேந்தனின் இலக்கியப்படைப்புகள் விரிவாக ஆய்வு செய்யப்பட வேண்டும்

## அஞ்சலிக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.22

அமரர் நாவேந்தனின் இலக்கியப் படைப்புகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்ட வேண்டும். அதுவே இலக்கிய உலகம் அவருக்கு அளிக்கும் சிறந்த அஞ்சலியாகும்.

யாழ்.இலக்கிய வட்டம் நடத்திய நாவேந்தனின் நிறைவு அஞ்சலிக் கூட்டத்தில் அஞ்சலி உரை நிகழ்த்திய புத்தொளி சிவபாதம் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் செங்கை ஆழியான் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

புத்தொளி சிவபாதம் மேலும் அங்கு உரையாற்றும் போது கூறியதாவது:-

நாவேந்தனின் மறைவு பன்முகப் படுத்தப்பட்ட எமது இலக்கியப் பரப்புக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவர் எழுதிய கடிதங்கள், இலக்கிய ஆக்கங்கள் பல என்னிடம் இருக்கின்றன. அவரைப்பற்றி ஆய்வு செய்ய விரும்புகின்றவர்கள் என்னுடன் தொடர்பு கொண்டால் சகல ஆவணங்களையும் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கின்றேன் - என்று கூறினார்.

செங்கை ஆழியான் தமது தலைமையுரையின் போது கூறியதாவது:-

தமிழரசுக்கட்சியின் பிரசாரப் பீரங்கியாக இருந்து கட்சியை வளர்ப்பதில் அக்கறையுடன் செயற்பட்டவர் அமரர் நாவேந்தன்.

எனது சகோதரன் புதுமை லோலன் அவர்களும் நாவேந்தனும் இணைபிரியா நண்பர்கள் என்பதால் நாவேந்தனுடன் நெருங்கிப்பழகும் சந்தர்ப்பம் எனக்கு ஏற்பட்டது.

நாவேந்தன் உடுவில் தொகுதியிலும் புதுமைலோலன் கிளிநொச்சி தொகுதியிலும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட வேண்டும் என்று க.பொ.இரத்தினம் கட்சியிடம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனால் இருவரும் கட்சியை விட்டு விலகினார்கள்.

15 வயதிலே இவரது கட்டுரை 'இந்து சாதனம்' பத்திரிகையில் வெளியானது. அதனைத் தொடர்ந்து 'சுதந்திரன்', 'தினகரன்', 'வீரகேசரி' ஆகியவற்றில் எழுதத் தொடங்கினார்.

நாவேந்தன் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையில் ஆழமான ஈடுபாடு கொண்ட போதும் நாஸ்திகனாக இருக்கவில்லை.

தனது இலக்கியப் படைப்புகள் ஊடாகவும் மேடைபேச்சு மூலமும் தீண்டாமைக்கு எதிராகவும், சாதியத்திற்கு எதிராகவும் குரல் கொடுத்தவர் அமரர் நாவேந்தன். சிறுகதை, நாவல், திறனாய்வு எனப் பலதுறைகளிலும் கால் பதித்தவர் அவர்.

பெரியார், ஜீவானந்தம், அறிஞர் அண்ணா ஆகியோரின் கருத்துக்களை தனது எழுத்துக்களில் பிரதிபலித்தவர் அவர் 'பருவச்சிக்கல்' என்னும் தலைப்பில் இவர் முதலில் எழுதிய சிறுகதை சுதந்திரனில் வெளியானது.

'தியாகம்', 'வாழத் தெரிந்தவள்', 'வெள்ளிக் கிழமை', 'பட்டமரம்', 'விழிப்பு', 'வாழ்வு', 'ஒரு சொட்டுக் கண்ணீர்', 'சுடலை ஆண்டிகள்' போன்ற தலைப்புகள் உட்பட பல்வேறு தலைப்புகளில் அவர் சிறுகதைகளை எழுதியுள்ளார்.

சமூகத்துக்கு எதைச் சொல்ல விரும்புகிறாரோ அதனைத் தனது பாத்திரங்கள் ஊடாகப் புரிய வைத்தவர். நாவேந்தன் 24 மணி நேரமும் இயங்கிய ஒரு மனிதர். அவர் மறைந்து விட்டாலும் அவரது எழுத்துக்கள் எங்களோடு வாழ்ந்து வருகின்றன.

அவர் உயிருடன் இருக்கும் பொது எம்மால் அவரைக் கௌரவிக்க முடியவில்லை. எனவே மறைவின் பின்னராவது அவரது உறவினர்கள், சகோதரர்கள் அவரது சிறுகதைத் தொகுதி ஒன்றினை வெளியிட வேண்டும் - இப்படி அவர் கூறினார்.

சொக்கன், கலைப்பேரரசு ஏ.ரி. பொன்னுத்துரை, அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை' ஆகியோரும் நினைவஞ்சலி உரை நிகழ்த்தினர்.

(ஐ-5)

## 358 பேர் கொடுப்பனவு பெற்றனர்

சண்டிலிப்பாய்,ஓக.22

சண்டிலிப்பாய் (வலி.தென் மேற்குப்) பிரதேச செயலக பிரிவில் தற்காலிகமாக இடம்பெயர்ந்து தங்கியிருப்பவர்களுக்கான 2ஆயிரம் ரூபா நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுவருகின்றது.

இதன் முதற்கட்டமாக கடந்த வாரம் பண்டத்தரிப்பு (ஜே-146) கட்டுடை(ஜே-140), மானிப்பாய் வடக்கு (ஜே-137), சுதுமலைதெற்கு(ஜே-130) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து விண்ணப்பித்த 358 பேருக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து இக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

இக் கொடுப்பனவுக்கு விண்ணப்பித்திருந்த 460 பேரில் 358 பேரே செயலகத்திற்கு வந்து இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இக்கொடுப்பனவை இது வரை பெறத் தவறியவர்களுக்கு விரைவில் வேறு ஒரு தினத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரதேச செயலக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(ஐ-135)

## தவறிவிட்ட புத்தகப் பார்ஸல்

யாழ்ப்பாணம்,ஓக.22

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் மூலம் ஆஸ்பத்திரிக்கென எடுத்துவரப்பட்ட புத்தகப் பொதி ஒன்று இ.போ.ச. பஸ்ஸில் எடுத்து வந்த வழியில் காணாமற் போய்விட்டது.

அதனைத் தவறுதலாக எவராவது எடுத்திருந்தால் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்குமாறும் ·

யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ)

## இரு தடைவை நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம்,ஓக.22

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இந்த வாரம் இரு தடவைகள் இடம் பெறவுள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமையும், எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் நோயாளர் கப்பல் சேவை நடைபெறும். இத்திகதிகளில் பயணம் செய்யப் பதிவுசெய்து பயணத்தினை உறுதிப்படுத்தியவர்கள் காலை 7 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-139)


# சேவை நலன் பாராட்டு



## திரு.அருணாசலம் திருநாவுக்கரசு

திரு. அருணாசலம் திருநாவுக்கரசு அவர்கள் எமது பாடசாலையின் முதல் அதிபர் என்ற பெருமைக்குரியவர். தமது 40 வருட சேவையில் ஏறக்குறைய 20 வருடங்கள் இப்பாடசாலையின் அதிபராக இருந்து அல்லும், பகலும் அயராது அரும், பெரும் சேவையாற்றி 15.07.2000 அன்று ஓய்வு பெற்றுள்ளார். இவரைப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.

(77531)



## கூரைத் தகடுகள் & சிமெந்துக் கற்கள்

தரமான கூரைத் தகடுகள், முகட்டுத் தகடுகள், சிமெந்துக் கற்கள் விற்பனைக்கு உண்டு.

**தொழிற்சாலை:**
கியூடெக்,
14, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**அலுவலகம்:**
கியூடெக்,
சென். அர்ச்.அன்னம்மா கோயில்,
மானிப்பாய்.

(77539)



## பாராட்டுகின்றேன்

திங்கள் என்ன? வெள்ளி என்ன? விடிந்தால் மரண ஓலம்
எங்கள் நாட்டில் எந்த நாள் தான் சாவு இல்லை.
அந்தச் சாவுக்கும் பயமின்றி எங்கள்

**அரசாங்க அதிபர் க.சண்முகநாதன்**

அவர்கள் ஆகாய மார்க்கமாக விமானத்திலும் ஆழ்கடல் ஊடாக கப்பலிலும் கொழும்பு சென்று பெரும்பான்மையினருடன் வாதாடி தமிழ் மக்கள் உணவின்றித் தவித்து இருக்கக்கூடாது என்று நிவாரணம் மற்றும் அத்தியாவசியப் பொருள்கள், மண்எண்ணெய், டீசல், பெற்றோல் இன்னும் தேவையான பொருள்களை கப்பலில் யாழ்ப்பாணம் வரவழைத்துச் சேவையாற்றி வருகிறார். இவருக்குப் பக்கத்துணையாக

**மேலதிக அரசாங்க அதிபர்
து.வைத்திலிங்கம்**

அவர்களும் இருந்து வருகிறார். எத்தனையோ பிரச்சினைகள் இருந்தாலும் இவர்கள் மக்களை இன்முகத்துடன் வரவேற்று மக்களின் குறைகளைக் கேட்டு அவற்றை நிறைவேற்றி விடுவார்கள். மற்றும் வீடு உடைந்தவர்களுக்கும் பண உதவி செய்கிறார்கள். இவர்கள் இருவரையும் தமிழ் மக்கள் மறக்கக்கூடாது. இவர்களைத் தொடர்ந்து சேவை செய்ய நல்லூர் முருகன் காப்பாற்ற வேண்டும் என்று நான் முருகனை மன்றாடுகிறேன்.

சு.கனகரத்தினம்
நிர்வாகி
தண்ணீர்ப் பந்தல்,
நல்லூர்.

(77518)



## சுருக்கெழுத்தாளர்/தட்டெழுத்தாளர் பயிற்சி

**வடமராட்சி சுருக்கெழுத்துக்கழக பயிற்சி நிலையத்தில்**
தமிழ், ஆங்கில சுருக்கெழுத்தாளர் பயிற்சி,
ஆங்கில தட்டெழுத்தாளர் பயிற்சி நெறிகள்
(01-09-2000) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இப்பயிற்சியைப் பெற விரும்புபவர்கள் காலை 9.00 மணி முதல் பகல் 12.00 மணிவரை கழகத்தில் விவரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் பெற்றுக்கொள்ளலாம். நேர்முகப் பரீட்சை(26-08-2000) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெறும்.

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம்,
வதிரி, கரவெட்டி.

**செயலாளர்.**

(77525)



## 3ஆம் வருட பொதுக்கலை மாணவருக்கான அவசர கலந்துரையாடல்

**காலம்:-** 23-08-2k (நாளை புதன்கிழமை)
**நேரம்:-** காலை 10.00 மணி (பு.நேரம்)
**விடயம்:-** பரீட்சை பற்றிய தீர்மானம் எடுத்தல்

மீள் பரீட்சார்த்திகள் உட்பட அனைத்துப் பொதுக்கலை மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

நன்றி.

மாணவப் பிரதிநிதி,
3ஆம் வருடம் பொதுக்கலை.

(77528)



## அவசர கலந்துரையாடல்

**அனைத்து 2ஆம் வருட கலைப்பீட மாணவர்களுக்குமான பரீட்சை தொடர்பாக முக்கிய கலந்துரையாடல் நாளை (23.08.2000) புதன்கிழமை காலை 10.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

2ஆம் வருட பிரதிநிதி,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(77530)



## வாடகைக்கு

**கே.கே.எஸ். வீதி, சுன்னாகத்தில் பல நோ.கூ. சங்கத் தலைமையகத்துக்கு முன்னால் புதிய கடைக் கட்டடங்கள் வாடகைக்கு உண்டு.**

*தொடர்பு:-*

*ராஜா கொம்பிளெக்ஸ்*
கே.கே.எஸ் வீதி,
சுன்னாகம்.

(77534)



**வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்**

## அவசர பொதுக்கூட்டம்

**இடம்:** D.M.I கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.
**காலம்:** இன்று (22.08.2k) செவ்வாய்க்கிழமை
*முற்பகல் 11.00 மணி* (s.l.t)

அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

**குறிப்பு:** 1998இல் நடைபெற்ற ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக் கடிதத்தினையும் தவறாது கொண்டுவரவும்.

(77537)

# பயணிகள் கப்பல் சேவை விடயத்தில் அரசியல் கட்சி தலையீடு வேண்டாம்!

## ரெலோ அமைப்பு கோரிக்கை

'செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் தற்போது நடைபெற்றுவரும் பயணிகள் கப்பல் சேவை தொடர்பான நடைமுறைகள் அரசியல் கட்சிகளின் கைகளுக்கோ அல்லது கட்சியின் சிபார்சு பெற்ற ஒரு தனியார் நிறுவனத்துக்கோ கைமாறுவதை குடாநாட்டு மக்கள் அனுமதிக்கக் கூடாது.'

ரெலோ அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

தொடர்ந்து கொண்டு இருக்கும் கொடூர யுத்தத்தால் அடைக்கப்பட்ட சிறைக்குள் சிக்கித் தவிப்பவர்கள் போல் யாழ்.குடாநாட்டு மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். தென் இலங்கையும் யாழ்ப்பாணமும் வெவ்வேறு நாடுகளைப் போல் காட்சியளிக்கின்றன. உதாரணமாக பிரயாண விடயத்தை எடுத்துக் கொண்டால் குடாநாட்டில் இருந்து பல்வேறு தேவைகளுக்காக கொழும்புக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் பிரயாணம் மேற்கொள்ள இருப்பவர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர். குறிப்பாக பிரயாணச் சீட்டுக்களை பெறுவதில் நூற்றுக்கணக்கான மக்கள் சிவில் நிர்வாக காரியாலயம் முன் உணவு, குடிதண்ணீர் போன்ற வசதிகள்கூட இல்லாத நிலையில் பல மணிநேரம் மு[illegible]த்துக் காத்துக் கிடந்து ஏமாற்றத்துடன் திரும்பும் நிலையும் உள்ளது.

பிரயாணச் சீட்டைப் பெற்றவர்கள் பல மணி நேரம் கடல் பிரயாணத்தில் கடலில் என்ன நடக்குமோ என்ற அச்சத்துடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு செல்லும் பரிதாப நிலையும் தோன்றியுள்ளது. தற்போது செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வழித்துணையுடன் 'சிற்றி ஒவ் றிங்கோ' நடைமுறையை நாம் வரவேற்கும் அதே வேளை அரசியற் கட்சிகளின் கைகளுக்கோ அல்லது கட்சியின் சிபார்சு பெற்ற ஒரு தனியார் நிறுவனத்திற்கோ கப்பல் கைமாறுவதை குடாநாட்டு மக்கள் அனுமதிக்கக்கூடாது; ரெலோ இயக்கமும் அதனை கடுமையாக எதிர்க்கும்.

தேர்தல் காலம் நெருங்கிவருவதால் கட்சிகள் தங்கள் சொந்தப் பாவனைக்கு உபயோகப்படுத்தி தங்கள் உறுப்பினர்களையும் ஆதரவாளர்களையும் ஏற்றி இறக்குவதுடன் வியாபார நோக்கத்திற்காகவும் பயணிகள் கப்பலைப் பயன்படுத்த நிறைய வாய்ப்புக்கள் உண்டு. இதனால் ஏனைய கட்சிகளுக்கும் மக்களுக்கும் பல சங்கடங்கள் ஏற்படலாம். அத்துடன் ஒரு கட்சிக்கோ அல்லது கட்சி சார்ந்த நிறுவனத்திற்கோ கப்பலை கையளிக்க கப்பல் உரிமையாளர்கள் முன்வரக் கூடாது. கப்பல் கைமாறும் பட்சத்தில் மக்கள் ஓரளவேனும் நிம்மதியாகப் பிரயாணம் மேற்கொள்ள முடியாது. செஞ்சிலுவைச் சங்கமும் வழித்துணை செய்ய முன்வராது. கடந்த பல வருடங்களுக்கு முன்பு 'ஐரிஷ்மோனா' கப்பலுக்கும், மாலுமிகளுக்கும் என்ன நடந்தது என்பதை அரசு சிந்திக்க வேண்டும். கப்பல் கைமாறும் பட்சத்தில் கப்பலுக்கு போதிய பாதுகாப்பும் இல்லை என்பதையும் கருத்திற் கொள்ளல் வேண்டும். இவற்றையெல்லாம் மீறி கப்பலை அரசு கையளிக்க முயன்றால் இங்குள்ள ஏனைய ஆறு கட்சிகளுக்கும் அரசால் தனித்தனியாக கப்பல்கள் வழங்க முடியுமா? என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### புலிகள் என நினைத்து

# படையினர் - பொலீஸார் தவறுதலாக மோதல்

வவுனியா - மன்னார் வீதியில் பொலீஸாருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் பறையனாலங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளையில் மன்னார் வீதியில் பொலீஸ் அணியொன்றும் தேடுதல் நடவடிக்கையொன்றில் ஈடுபட்டிருந்தது. புலிகள் வருவதாக நினைத்து பொலீஸாரும் இராணுவத்தினரும் சில நிமிடங்கள் மாறி மாறித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டுள்ளார். பின்னர் வோக்கி டோக்கி மூலம் தொடர்பு கொண்டு நிலைவரத்தை அறிந்த பின்னர் இரு தரப்பினரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதை நிறுத்தினர்.

இதேவேளை-

கந்தளாய் அலி ஒலுவ என்ற இடத்தில் சனிக்கிழமை இரவு பொலீஸார் பதுங்கியிருந்து தாக்கியதில் இரண்டு புலிகள் கொல்லப்பட்டதுடன் ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

இத்தாக்குதல் சம்பவம் சனிக்கிழமை இரவு 9.30 மணிக்கு நடைபெற்றுள்ளது. புலிகள் பயிற்சிக்கு ஆள்களைச் சேர்த்துக் கொள்வதற்காக அலி ஒலுவ கிராமத்துக்கு வருவதாகக் கிடைத்த தகவலொன்றின் பேரில் மறைந்திருந்து இந்தத் தாக்குதலை நடத்தியதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் இரண்டு ரி-56 துப்பாக்கிகள், ஐந்து மகஸின்கள், 150 ரவைகள், இரண்டு சயனைட்டுகள் உட்பட இரு புலிகளின் சடலங்களையும் கந்தளாய்ப் பொலீஸார் கண்டெடுத்துள்ளனர்.

இதேவேளை-

கொல்லப்பட்ட புலி உறுப்பினர்களோடு வந்த ஏனையோர் காயங்களுடன் தப்பிச்சென்றுள்ளதாகவும் பொலீஸார் தெரிவித்தனர். அலி ஒலுவ பகுதியிலுள்ள சகலரினதும் விவரங்களைத் திரட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜானக பெரேரா விரைவில் ஓய்வு?

இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தனது ஓய்வுகால வயதிற்கு முன்னதாகவே ஓய்வு பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

2001ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துடன் ஓய்வுபெறவுள்ள இவர், அதற்கு முன்னதாகவே ஓய்வு பெறுவதற்கான பத்திரங்களை இராணுவ தலைமையகத்தில் சமர்ப்பித்துள்ளதாக தெரியவருகிறது என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை, புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல நியமிக்கப்பட்டதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் போவதாக சில தரப்புகள் தெரிவித்துள்ளன.

இராணுவச்சட்டப்படி இவ்வாண்டு ஜூன் மாதம் 14ஆம் திகதியுடன் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் பலகல்லவை, ஜனாதிபதி தனது விசேட அதிகாரத்தின் மூலம் இதுவரை காலமும் இல்லாத பிரதி இராணுவத் தளபதி பதவியை உருவாக்கி அப்பதவியில் நியமித்திருந்தார். (ஐ-6)

# படுக்கையில் கோடரி வெட்டுக்கு இலக்கானவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம்,ஓக.22

இரவுவேளை நித்திரையில் வைத்து கோடரி வெட்டுக்கு இலக்கானதாகத் தெரிவித்து கடந்த 13 ஆம் திகதி யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் சிகிச்சை பலன் அளிக்காத நிலையில் கடந்த சனியன்று மரணமானார்.

உரும்பிராய் கிழக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கழுத்து மற்றும் இருபக்க தோள் மூட்டுக்களில் கோடரி வெட்டுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்பட்டு ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த செல்லத்துரை கனகராசா (வயது28) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவருடன் அருகில் படுத்திருந்த இவரது மகனான கனகராசா நிலாம்ஸ் என்ற நான்கு வயதுச் சிறுவனும் கோடரி வெட்டுக்கு இலக்கான நிலையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இறந்தவரின் மைத்துனரான விக்ரர் ஜெயசீலன் என்பவர் கோப்பாய் பொலீஸாரால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.(உ-9-15)

## நெடுந்தீவுக்கு மருந்து

நெடுந்தீவு அரசினர் வைத்தியசாலைக்குரிய காலாண்டிற்கான மருந்து வகைகள் இன்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறையில் இருந்து எடுத்து வரப்படும் என நெடுந்தீவு வைத்திய அதிகாரி எஸ். திருநாவுக்கரசு தெரிவித்தார்.(ஐ-111)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்யப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 21ஆம் திகதிவரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 511/123835/A | 511/136822/A |
| 511/136822/B | 511/136822/C |
| 511/144854/A | 511/144860/A |
| 511/144860/B | 511/144862/A |
| 511/144877/A | 511/144877/B |
| 511/144991/A | 511/145172/A |
| 511/145172/B | 511/145172/C |
| 511/145172/D | 511/145172/E |
| 511/145172/F | 511/145172/G |
| 511/145249/A | 511/145249/B |
| 511/145249/C | 511/145249/D |
| 511/145351/A | 511/145442/A |
| 511/145442/B | 511/145442/C |
| 511/145442/D | 511/147646/A |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 511/147646/B | 511/147646/C |
| 511/152000/A | 511/152319/B |
| 511/152319/C | 511/154319/A |
| 511/154920/A | 511/154920/B |
| 511/154920/C | 511/156700/A |
| 511/156815/A | 511/156815/B |
| 511/156830/A | 511/156901/A |
| 511/157103/A | 511/157104/A |
| 511/157105/A | 512/144364/A |
| 512/144626/A | 512/144626/B |
| 512/144626/C | 512/144626/D |
| 512/144626/E | 512/144626/F |
| 512/149852/A | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 512/149852/B | 512/149978/A |
| 512/149978/B | 512/150167/A |
| 512/150303/A | 512/150303/B |
| 512/152352/A | 512/152352/B |
| 512/152352/C | 512/152352/D |
| 512/152352/E | 512/152470/A |
| 512/152478/A | 512/152478/B |
| 512/152481/A | 512/152481/B |
| 512/152743/A | 512/152743/B |
| 512/152743/C | 512/154039/A |
| 512/154049/A | 512/154049/B |
| 512/154069/A | 512/154069/B |
| 512/154069/C | 512/154084/A |
| 512/154104/A | 512/154104/B |
| 512/154104/C | 512/154110/A |
| 512/154110/B | 512/154110/C |
| 512/154110/D | 512/154177/A |
| 512/154177/B | 512/154177/C |
| 512/154263/A | 512/154263/B |
| 512/154263/C | 512/154263/D |
| 512/154270/A | 512/154270/B |
| 512/154284/A | 512/154284/B |
| 512/154284/C | 512/156219/A |
| 512/156274/A | 512/156302/A |
| 512/156302/B | 512/156305/A |
| 512/156338/A | 512/156338/B |
| 512/156370/A | 512/156370/B |
| 512/156371/A | |

**சண்டிலிப்பாய்**

512/156371/B

**உடுவில்**

| | |
|---|---|
| 512/156371/C | 512/156417/A |
| 512/156417/B | 512/156512/A |
| 512/156563/A | |


## பருத்தித்துறை பிரதேச சபை

# கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைகளை நிறைவேற்றுவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், இதற்கான தகுதியினை உரிய அதிகாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக் கூடிய அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். அதற்கான கேள்விப் படிவங்களை பின்வரும் விகிதங்களில் வைப்புப் பணத்தையும் படிவப் பணத்தையும் செலுத்தி 05.09.2000 பி.ப. 3.30 மணிவரை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 06.09.2000 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். 06.09.2000ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்குத் திறக்கப்படும். 01 தொடக்கம் 09 வரையான வேலைகளுக்கு ஓர் ஒப்பந்தகாரர் அல்லது ஒரு சங்கம் மூன்று கேள்விகள் மட்டுமே சமர்ப்பிக்க முடியும்.

## அட்டவணை

| வேலை விவரம் | மீளளிக்கப்படாத கட்டணம் | மீளளிக்கக்கூடிய வைப்பு |
|---|---|---|
| 1. குரும்பைகட்டி வீதி புனரமைத்தல் | 100.00 | 3500.00 |
| 2. சுண்டங்கி வீதி | 100.00 | 4000.00 |
| 3. போதரவுமட வீதி | 100.00 | 3600.00 |
| 4. குடத்தனை வடக்கு வீதி | 100.00 | 4500.00 |
| 5. திக்கம் வவுணில் வீதி | 100.00 | 3500.00 |
| 6. கெருடாவில் மாதர் சங்க வீதி | 100.00 | 3500.00 |
| 7. கூவில் வீதி | 100.00 | 3000.00 |
| 8. திகிரி வீதி | 100.00 | 3000.00 |
| 9. திக்கம் மாறாம்புலம் வீதி | 100.00 | 1400.00 |
| **சபை நிதி வேலைகள்** | | |
| 1. காரியாலய உள்ளகக் கண்ணாடி அறை அமைத்தல் | 100.00 | 500.00 |
| 2. பொலிகண்டி அம்பிகை ச.ச. நிலைய குழாய்க்கிணறு திருத்தல் | 100.00 | 200.00 |
| 3. வல்லியாளந்தம் தெற்கு வீதி அமைத்தல் | 100.00 | 1250.00 |
| 4. தட்டாதெரு ஒழுங்கை புனரமைப்பு | 100.00 | 1000.00 |
| 5. ஊருத்திராவத்தை பாடசாலை வீதி புனரமைத்தல் | 100.00 | 1000.00 |

கேள்விகள் யாவும் அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு தலைவர், பருத்தித்துறைப் பிரதேச சபை, புலோலி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமோ அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ குறித்த திகதியின் முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விவரங்களைக் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**பருத்தித்துறை பிரதேச சபை,**
**தலைமை அலுவலகம், புலோலி.**
**21.08.2000**

**ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன் ஜே.பி.யு.எம்**
தலைவர்
பருத்தித்துறை பிரதேச சபை

(C/12582)



# OBITUARY

## PUVIRAJESINGHE - JOSEPHINE

PUVIRAJESINGHE - JOSEPHINE BEATRICE RUBY (Nee SATTRU KULASINGHE) beloved wife of Moses Fredrick Julian (Govt. Press, Malaysia) loving mother of late Leela, Rita (Rtd.Vice Principal, St. James Maha Vidyalaya, Jaffna), Bernard (Field Officer, Insurance Corporation), Rosie (Rtd Teacher - St. Patricks, Jaffna & St. Joseph's, Colombo - 10), Andrew (London), Daniel (Kesh Garments, Colombo), Agnes (Muslim Vidyalaya, Batticaloa), Sister of Nancy Edirmanasinghe. Mother in law of late Angelo Joseph, Dorus Rajasingam, Mary (Insurance Corporation), Gemini Jenendran, Kanthi (London), Maxine and late Emil Sattrukulasinghe, loving grand mother of Roshinie Suvendraj, Romesh, Romanie Janathkumar Gehan, Tania (all of London), Dominic, Mellanius (C.I.C. Colombo), Malcom (Seylan Bank), Marian, Assumpta, Jacintha, Madona, Marina, Chrishanthini, Suresh, Moreash & Ashanthini, Dearest Great Grand mother of Sharon & Yvonne Suvendraraj (London), expired on 20.08.2000. Cortege leaves residence at 4.00 p.m. on 23.08.2000 to Burial Grounds, Nayakakande, Hendala, Wattala.

*No.04, Christurajah Mawatha,*
*Maradana Road,*
*Hendala,*
*Wattala.*

(77527)

**Informant: Son**
**B.L.Puvirajesinghe,**
***No.55, Old Park Road,***
***Jaffna.***

## நீதியான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கையை முன்வைத்தனர்.

ஜனநாயக வழிக்குத் திரும்பிய ஆயுதக் குழுக்கள் இத் தேர்தலில் போட்டியிடுகின்றன. எனவே அங்கு நீதியான முறையில் தேர்தல் நடைபெறுவதை உறுதிப் படுத்தவேண்டும் - அத்துடன் யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடைமுறைகளில் படையினரின் தலையீடு இருக்கக்கூடாது என கூட்டணிக்குழு கோரியுள்ளது.

## ஈ.பி.ஆர்.எல். எவ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சின்னத்தில் போட்டியிடுவோம். தடை நீக்கப்படாவிட்டால் சுயேச்சையாகப் போட்டியிடுவோம்.

"அதே சமயம் புளொட், ரெலோ அமைப்புக்களுடனும் பேச்சு நடத்தி வருகிறோம். பேச்சுக்களில் இணக்கம் ஏற்பட்டால் அவற்றுடன் இணைந்து ஒரே சின்னத்தில் போட்டியிடவும் வாய்ப்புண்டு"

- என்றார் அவர். (உ-3)

## யாழ்.மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்டத் தேர்தல் களத்தில் குதிப்பது பெரும்பாலும் நிச்சயமாகிவிட்டது.

முன்னாள் யாழ்.மாவட்ட எம்.பியான இ.இராமேஸ்வரன்(மதன்)தலைமையிலான மக்கள் ஜனநாயகப் பேரவை இத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடுவதா அல்லது வேறு ஏதேனும் அணிகளுடன் இணைந்து போட்டியிடுவதா என்பதைத் தீர்மானிக்கவில்லை.

வரதராஜப்பெருமாள் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். அணி அனேகமாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணிப் பட்டியலில் போட்டியிடக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலும் போட்டியிடுவோம் என்று முன்னர் அறிவித்த ஹரிச்சந்திர விஜயதுங்க தலைமையிலான 'பூமிபுத்திர' கட்சி இங்கு போட்டியிடுவதற்கு ஏதேனும் ஏற்பாடு செய்துள்ளதா என்பது தெரியவரவில்லை.

ஐக்கிய தேசியக் கட்சியும் யாழ். மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றது.

யாழ்.மாவட்ட நிலைமை குறித்து ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் கடந்த சில தினங்களாக தமக்கு இங்குள்ள தொடர்புகள் மூலம் கேட்டறிந்து வருவதாகவும் -

யாழ்ப்பாணத்தில் ஐ.தே. கட்சி வேட்பாளர் பட்டியல் ஒன்றை நிறுத்த அவர் அதிக ஆர்வம் கொண்டிருப்பதாகவும் -

சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டத்தில் ரெலோ ஏற்பாட்டிலான சுயேச்சைக் குழுவைத் தவிர வேறு சுயேச்சைக் குழுக்கள் தேர்தலில் நிற்பதற்கான வாய்ப்புகள் ஏதும் தென்படவில்லை.

(உ)


IIS
Institute of Informatics Studies
100, Clock Twer Road, Jaffna.
T.P. No. 2831 E Mail: iis@ sltnet.lk

மாணவர்களே.....!
இன்றைய அறிவுசார் சமுதாயத்தை எதிர் கொள்ளத்தக்க வகையில் அடிப்படைத் தேவையான கணனிக் கல்வியை எங்கு பயில்வதென்ற குழப்பமா?

★ யாழ். மாவட்டத்திலேயே............
✓ ஒவ்வோர் ஆண்டும் அதிகமான மாணவர்கள் கல்விகற்று வெளிறேும் நிறுவனம்.
✓ அதிகளவு கணனிகளை பயிற்சி அளித்தலில் ஈடுபடுத்தியுள்ள ஒரே ஒரு நிறுவனம்.
✓ Multi Media Projectorகள் மூலம் மாணவர்களுக்கு விரிவுரைகளை நடத்தும் நிறுவனம்.
✓ மாணவர்களின் வசதி கருதி அதிகளவு கிளைகளைக் கொண்டு பயிற்சி அளிக்கும் நிறுவனம்.
✓ உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்.
✓ தகுதி - அனுபவம் - திறமை வாய்ந்த அதிகளவு விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.
✓ மாணவர்களின் அறிவு விருத்திக்கு ஏற்றவகையில் புத்தகங்கள், CDக்கள் ஆகியவற்றைக் கொண்ட நூலகம்.
✓ மாணவர்களின் நம்பிக்கைக்குரிய அதிகளவான புலமைப்பரிசில்களை ஆண்டு தோறும் வழங்கி வரும் நிறுவனம்.

இவற்றிற்கெல்லாம் மேலாக..........
★ ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரே ஒரு நிறுவனம்.
★ குழப்பத்தை விடுங்கள் உங்கள் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதே எமது கடமையாகும்.

- இயக்குநர் -
IIS
யாழ்ப்பாணம்.

மேலதிக விவரங்களை நாளைய உதயனில் பார்வையிடலாம்.

(C/12586)


## அறிவித்தல்

20.08.2000 வெளியாகிய 'உதயன்' பத்திரிகையில் அ. குமாரவேல் ஆசிரியர் காங்கிரஸ் பட்டியலில் போட்டியிடுவதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. அது நானாக இருக்கலாமா எனப் பலர் விசாரிக்கின்றனர். பெயரும், தொழிலும் ஒன்றாக இருந்த போதிலும் அது நானல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பொன்னையா லேன்,*
*ஆனைக்கோட்டை*

(77544)

அ.குமாரவேல்
- ஆசிரியர் -

## அறிவித்தல்

வெளிநாட்டு வானொலி ஒன்றின் செய்தி எனக் கண்டு, உள்நாட்டில் இருந்தும், வெளிநாட்டில் இருந்தும் பல்வேறு தொலைபேசி அழைப்புக்கள் மூலம் நான் தேர்தலில் நிற்பது உண்மையா? எனக் கண்டறியப் பலரும் விருப்பம் கொள்வதால் -

எக்காரணம் கொண்டும் எக்கட்சியின் சார்பிலும், நாடாளுமன்றத் தேர்தலிலோ அல்லது உள்ளூராட்சித் தேர்தல்களிலோ, அத்தோடு எந்தவித அரசியல் சார்பான தொடர்புகளையோ, பதவிகளையோ ஏற்கும் எண்ணம் இல்லையென எனது நலன் விரும்பிகளுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

யாழ்ப்பாணம். (C/12589)

மு. திருநாவுக்கரசு,
முன்னாள் நீதிபதி,

## திருமலையிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ணம் செய்ய நேற்றுவரை 123 பேரே பதிவு செய்துள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

இன்று காலை பருத்தித்துறைக்கு வரும் இக்கப்பல் இன்று மாலையே திருமலை திரும்பும்.

பருத்தித்துறையில் இருந்து இன்று புறப்படும் இந்தக் கப்பலில் பயணம் செய்யப் பயணச்சீட்டுப் பெற்றவர்களை காலை 8 மணிக்கு பயண ஏற்பாடுகளுடன் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது.(உ-3)

## அரச அதிபர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தங்களின் 16-08-2000ஆம் திகதிய பத்திரிகையில் "சிற்றி ஒவ் றிங்கோ அரசுக்குச் சொந்தமான கப்பல் அல்ல" என்ற தலைப்பில் வந்த செய்தியில் இக்கப்பல் சேவையை அரசாங்க அதிபர் பொறுப்பேற்க வேண்டும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நேற்று எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பாக.... எனத் தொடரும் செய்தி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் திருகோணமலையில், யாழ். திருகோணமலை பிரயாணிகள் கப்பல் சேவை தொடர்பான பயணிகள் பட்டியல் திருமலைப் பிரதேச செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அப்பணியினை யாழ்ப்பாணத்தில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கொள்ள வேண்டும் என்றே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ரிக்கெற் வழங்குவது பற்றி எந்தவிதமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

ஆகவே தங்கள் பத்திரிகையில் தவறான முறையில் இவ்விடயம் பிரசுரிக்கப்பட்டுள்ளதால் அது பொது மக்களிடம் தவறான கருத்தினை உருவாக்கியுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கொழும்புத்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீடித்ததாகவும் - அது மேலும் தெரிவித்தது.

அதே சமயம் நேற்று நண்பகல் 12 மணியளவில் அந்தப் பகுதியில் மிக் விமானங்களும், ஹெலிகளும் தாக்குதலை நடத்தின.

இதன் காரணமாக யாழ். செயலகத்தில் இடம்பெற்ற நேர்முகப் பரீட்சை மற்றும் இணைப்புக் குழுக் கூட்டம் ஆகியவற்றில் பங்கு பற்றியவர்கள் மத்தியில் பதற்றம் காணப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் வடக்கு - கிழக்கு மாகாண சபை அதிகாரிகளும் பங்குபற்றியிருந்தனர்.

(உ-3-7-15-139)


விண்ணப்பித்து விட்டீர்களா?
IBMS இன் 5000 மாணவர்களுக்கான மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2000/2001

இப்புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் பயிற்சி நெறிகள் வார, வார இறுதி நாட்களில் நடைபெறும்.

அலுவலக உத்தியோகஸ்தர்களுக்கான விசேட பிரிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1000 மாணவர்களுக்கு
100% புலமைப்பரிசில்
26.08.2000 விண்ணப்ப முடிவுத்திகதி

*Make the right move,*
*Take the right step.*
*Join.......*

IBMS
No. 701, K.K.S Road,
Jaffna.
N.G

இன்று!
பொது சாதாரண
பரீட்சை விசேட வகுப்பு
*மாலை 3.00 மணி*
து. துவசேகர் B.sc
கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி.
(77536)


## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
லது தனித்துப் போட்டியிடுவதா என்பது குறித்து முடிவை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியும், அஷ்ரப்பும் நேற்றுக் காலை முதல் மாலை வரை பேச்சுக்கள் நடத்தினர். ஆனால் முடிவு எதுவும் காணப்படாத நிலையில் இந்தப் பேச்சுக்கள் இன்று காலை வரை ஒத்திவைக்கப்பட்டன.

நேற்றைய பேச்சுக்கள் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அமைச்சர் அஷ்ரப் - "முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட முனைவது தேர்தலின் பின்னர் ஐ.தே.கவுடன் பேரம் பேசுவதற்காகவே என்று சிலர் கூறுகின்றனர். எந்தக் கட்டத்திலும் ரணிலின் தலைமையிலான ஐ.தே.கவுடன் நாம் பேரம் பேச முடியாது என்றார். (உ-3)

## பயணச் சீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடன் யாழ். திருகோணமலை பயணிகள் சேவையிலீடுபடும் "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பற் சேவையினது பயணச் சீட்டுக்கள் வழங்கும் பொறுப்பை உடனடியாக யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல் கட்சி ஒன்றிடம் அல்லது அக்கட்சி சிபார்சு செய்யும் வேறு ஒரு நிறுவனத்திடம் ஒப்படைக்கும்படி சம்பந்தப்பட்ட கப்பல் உரிமையாளருக்கு அரச உயர் மட்டத்தில் இருந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்ற பத்திரிகைச் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) திட்டவட்டமாக மறுக்கின்றது.

இத்தகைய செய்திகள் மக்களது அன்றாடப் பிரச்சினைகளில் கூடுதலாகக் கரிசனை செலுத்தி, அவர்களது பிரச்சினைகளைப் பெருமளவில் தீர்த்து வைக்கும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் மேல் மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயத்தை உருவாக்கி அரசியல் லாபம் தேடும் முயற்சியின் முதற்படியேயாகும்.

இத்தகைய விஷமத்தனமான, ஆதாரமற்ற செய்திகளை யுத்த அவலத்துக்குள் சிக்கித் தவிக்கும் மக்கள் மத்தியில் பரப்பி, அவர்களைக் குழப்பி வேடிக்கை பார்க்கும் முயற்சிகள் இனிமேலும் தொடரக் கூடாது என நாம் நம்புகிறோம்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் ஜனநாயக வழியில் எமது மக்களது பிரச்சினைகளுக்காகப் போராடி வருகின்றோம். நாம் எமது மக்களது அரசியல் உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கின்ற அதே வேளையில் தொடர்ச்சியாகக் கரைபுரண்டோடும் யுத்தத்தால் எமது மக்கள் எதிர் கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளையும் தீர்த்து வருகின்றோம்.

இதனால் எமது மக்களுக்கும் எமது கட்சிக்கும் இடையே வளர்ந்துவரும் நல்லுறவைக் கெடுக்கும் எண்ணம் கொண்ட தீய சக்திகள், எமக்கும் மக்களுக்கும் இடையே குழப்பத்தை விளைவிக்க இத்தகைய செய்திகளை "யாழ். நகரில் உள்ள பிரபல அரசியல் கட்சி" எனும் அடைமொழியுடன் வெளியிடுகிறார்கள். எனவே எமது மக்கள் இத்தகைய விஷமிகளது குழப்பத்துக்கு உள்ளாகாமல் இருக்கும்படி ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாம் கேட்டுக் கொள்கின்றோம்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஆசிரியர் குறிப்பு:-*

1. நேற்றைய செய்தியில் எந்தக் கட்சியின் பெயரையும் நாம் குறிப்பிடவில்லை.

2. எனினும் அது தங்களையே குறிப்பதாக ஈ.பி.டி.பி. கருதுமானால் அதை மறுக்க நாம் முன்வரவில்லை.

3. அரச உயர்மட்டத்திலிருந்தே இந்த உத்தரவு வந்ததாக நாம் எமது செய்தியில் தெளிவாகத் தெரிவித்திருந்தோம். எனவே மறுக்க வேண்டிய பொறுப்புடையவர்கள் அரசுத் தரப்பே தவிர ஈ.பி.டி.பியினர் அல்லர்.

4. நேற்று முன்தினம் இரவு சம்பந்தப்பட்ட கட்சியின் பெயர் குறிப்பிட்டு அத்தகைய வாய்மூல உத்தரவு அலரி மாளிகையில் இருந்து கப்பலின் உரிமையாளர்களான "ஜி.என்.ஜே.பி. குறூஸ் சேர்விஸஸ்" நிறுவனத்துக்கு தொலைபேசி வழியாக விடுக்கப்பட்டுள்ளது என்றும்-

அத்தகைய உத்தரவு கிடைத்ததும் பயணச்சீட்டு வழங்கும் முகவரான தங்களுக்கு அது பற்றிக் கப்பல் நிறுவன உரிமையாளர்கள் தொலைபேசி மூலம் அறிவித்ததாகவும் -

பயணச்சீட்டு வழங்கும் முகவரான "எம்.எல்.எஸ்.ரேடிங் கொம்பனி"யின் அதிபர் உதயனுக்குத் தெரிவித்தார். அத்தகவலை நேற்று இரவும் அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

5. யாழ் அரச அதிபர் அல்லது யாழ்.வர்த்தகர் சங்கம் அல்லது ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றின் ஒன்றினூடாக இந்தப் பயணச்சீட்டு விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ள வைக்க சம்பந்தப்பட்ட கட்சி முழுமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கின்றது என்பது நாம் சேகரித்த தகவல்களில் உறுதியாகியுள்ளது. (ஆர்)

## பத்துப்பேர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யின் பேரில் இவர்களை யாழ். மாவட்ட பதில் நீதிவான் பா.சுப்பிரமணியம் விடுதலை செய்தார்.

நடராசா தயாளன் (கில்னர் லேன்), பரமானந்தன் ஸ்ரீராகவன் (திருநெல்வேலி), நவரட்ணம் ஸ்ரீஸ்கரன் (கொட்டடி), இரட்ணம் அருந்தவராசா (கைதடி கிழக்கு), சின்னத்துரை இந்திரகுமார் (சங்கத்தானை), தம்பிராசா சுரேந்திரன் (வல்வெட்டித்துறை), ஆள்வான் வன்னியசிங்கம் (கரவெட்டி தெற்கு) மற்றும் யாழ். கொட்டடி சீனிவாசன் லேன் பகுதியைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களான சின்னத்தம்பி தியாகராசா, தி.கமலாதேவி, தி.சதாநந்தன், தி.ரஜிதா ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

(உ-9)


STP Computer World
54A, Palaly Road, Kantharmadam TP: 2674

A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான எங்களது திட்டங்கள்

இலவச பயிற்சி நெறிகள்
Information Technology
Programming Fundamentals
ஆரம்பம் 27-08-2000 & 30-08-2000 (9.00 A.M)
காலம் 1 மாதம்
முடிவில் பரீட்சை

புலமைப் பரிசில் திட்டம்
பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் புலமைப் பரிசில்கள்

பயிற்சி நெறிகள்
Diploma in **Business Computer Applications**
Diploma in **Scientific Computer Applications**
*(Including Mechanical Drawing & AutoCad)*
Diploma in **MS Office**
Diploma in **DeskTop Publishing**

பதிவுகளை பயிற்சி நெறி ஆரம்பமாகும் திகதிக்கு முன்னர் காரியாலயத்தில் நேரடியாக வந்து உறுதிப்படுத்தவும்.
- நிர்வாகி


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.